பக்கங்கள்: 16

# காலைக்கதிர்

Kalaikathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 ஆனி 29 ஞாயிற்றுக்கிழமை 14.07.2019 கதிர் 251

**இனி இது ரகசியம் அல்ல!**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள், ஜனநாயகப் போராளிகள் கட்சிக்காகப் பரிவுடன் பேசி வந்த வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் இப்போது இண்டும்கெட்டான் நிலையில் அல்லாடுகின்றார். பாவம்....!

கூட்டமைப்பில் பக்கம் 02

## தமிழர்களின் வரலாற்றுச் சின்னங்கள் திட்டமிட்டு அழிக்கப்படுகின்றனவா?

வாவெட்டி மலைக்கு வழிபட சென்ற மக்களுக்கு அதிர்ச்சி





முல்லைத்தீவு, ஜூலை 14

ஈழத் தமிழர் வரலாற்றுடன் தொடர்புடையதும் ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்துடன் தொடர்புடையதுமான வாவெட்டி மலை ஆபத்தை எதிர்கொண்டுள்ளதாகப் பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். பக்கம் 15

## கடற்படைத் தளபதிக்கு மைத்திரி சேவை நீடிப்பு



கொழும்பு, ஜூலை 14

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பியால் டி சில்வாவுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சேவை பக்கம் 15

## 2020 மே 15 மட்டும் பதவியில் மைத்திரி?

கொழும்பு, ஜூலை 14

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பதவிகாலம் எதிர்வரும் 2020 மே 15 ஆம் திகதியே நிறைவுக்கு வருகின்றது என சிரேஷ்ட சட்டத்தரணிகள் சிலர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் சில பக்கம் 15

## இலங்கைத் தமிழர் அனைவரும் ஒன்று சேரவேண்டிய கட்டாயம்

வவுனியாவில் கூறினார் அமைச்சர் மனோ



வவுனியா, ஜூலை 14

நாடு முழுவதும் வாழும் தமிழ்மக்கள் ஒன்றுசேரவேண்டிய கட்டாயம் தற்போது ஏற்பட்டுள்ளதாகத் தேசிய ஒருமைப்பாடு, அரசகருமமொழிகள், சமூக பக்கம் 15

## நாவற்குழியில் விகாரை நேற்றுத் திறந்து வைப்பு

தெற்கிலிருந்து வந்தது புனித தாது



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூலை 14

நாவற்குழியில் மேற்கொள்ளப்பட்ட புதிய சிங்களக் குடியேற்றத்தில் மிகப் பெரியள பக்கம் 15

# பிரபாகரனிடம் மஹிந்த பாடம் கற்க வேண்டும்!


**கூறுகின்றது ஐக்கிய தேசியக் கட்சி**



கொழும்பு, ஜூலை 14

நாடாளுமன்றத்தில் நடந்துகொள்ளவேண்டிய முறை தொடர்பாக, பிரபாகரனிடமும், அவரைப் பிரதிநிதித்துவப் படுத்திய உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் இருந்தபோது அவர்கள் செயற்பட்ட விதம் தொடர்பாகவும், மஹிந்த தரப்பு பாடம் கற்றுக்கொள்ள வேண்டும் என அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார். பக்கம் 15

## கிளிநொச்சி விபத்தில் வாகனச் சாரதி மரணம்!



கிளிநொச்சி, ஜூலை 14

கிளிநொச்சியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் வாகன சாரதி ஒருவர் பக்கம் 15

## போர்க்குற்றச்சாட்டு குறித்து ஐ.நா. இரகசிய விசாரணை?




கொழும்பு, ஜூலை 14

இலங்கைக்கு எதிரான போர்க்குற்றச்சாட்டுக்கள் குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை இரகசியமான முறையில் விசாரணைசெய்துள்ளதாகச் சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. பக்கம் 15

## கிடைக்கும் சந்தர்ப்பங்களை சரியாகப் பயன்படுத்துவோம்

கூறுகின்றார் செல்வம் எம்.பி.

மன்னார், ஜூலை 14

தேர்தல் காலங்களில் தமிழ் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் எவற்றையும் அரசு நிறைவேற்றவில்லை. எனவே கிடைக்கும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொண்டு தமிழ் மக்களுக்கான பக்கம் 15

## மைத்திரிபாலவிடம் தங்க கைத்துப்பாக்கி!



கொழும்பு, ஜூலை 14

ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ இல்லத்தில் தங்கக் கைத்துப்பாக்கி ஒன்று இருப்பதாகச் செயலகத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். பக்கம் 15

## கூட்டமைப்பின் விருப்பப்படியே செயற்படுகிறது ரணிலின் அரசு

சாடுகின்றார் அத்துரலிய தேரர்



கொழும்பு, ஜூலை 14

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ரிசாத் பதியுதீன் ஆகியோரின் விருப்பத்துக்கு அமையவே அரசு செயற்படுகின்றது. இந்த நிலையில் சிங்கள மக் பக்கம் 15

## மைத்திரியைக் கைகழுவும் சுதந்திரக் கட்சி எம்.பிக்கள்?

ஐ.தே.க. பக்கம் விரைவில் பாய்வர்

கொழும்பு, ஜூலை 14

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் ஐக்கிய தேசியக் கட்சியில் இணையவுள்ளனர் என நம்பகரமான தரப்புகளிலிருந்து அறிய முடிகின்றது.

இவர்களில் சிலருக்கு மாவட்ட இணைத் தலைமை பதவி வழங் பக்கம் 15

# அமிர்தலிங்கத்தின் 30 ஆவது ஆண்டு நினைவு தினம் வலி. மேற்கில் நேற்று







இலங்கையின் முதல் தமிழ் எதிர்க்கட்சி தலைவரும் நாடறிந்த தலைவரும் ஆகிய அ. அமிர்தலிங்கத்தின் 30 ஆவது ஆண்டு நினைவு தினத்தையொட்டி அவரது திருவுருவச் சிலைக்கு தமிழ் ஈழ விடுதலை இயக்கம் அஞ்சலி செலுத்தி நினைவு கூர்ந்தது.

இந்த நிகழ்வு நேற்று வலிகாமம் மேற்கு பிரதேச சபை முன்றலில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகம் ந.சிறிகாந்தா, கட்சியின் தவிசாளர் எம்.கே.சிவாஜிலிங்கம், கட்சியின் இளைஞர் அணிச் செயலாளர் சபா.குகதாஸ், கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் சில்வெஸ்டர் விமல் ராஜ் ,துணைமாவட்ட அமைப்பாளர் ஜெ.ஜெனார்த்தனன், கட்சியின் பிரதேச மற்றும் தொகுதி அமைப்பாளர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் ரெலோவின் தவிசாளர்கள், பிரதி தவிசாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் ரெலோவின் யாழ் மாவட்ட முக்கியஸ்தர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். (ஐ-07)

## காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனை 30 வருடங்களாகத் தேடிய தாய் மரணம்

யாழ்ப்பாணம், ஜுலை 14

காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனைத் தேடியலைந்த தாயார் ஒருவர், மகனைக் காணாமலேயே மரணமடைந்துள்ளார்.



1989ஆம் ஆண்டு எருக்கலம்பிட்டி பகுதியில் வைத்து காணாமல் ஆக்கப்பட்ட வேலுப்பிள்ளை தியாகராஜா (ரஞ்சன்) என்ற இளைஞரின் தாயாரான வேலுப்பிள்ளை வியாழும்மா என்பவரே உயிரிழந்தார். முதுமை காரணமாக இவர் உயிரிழந்தார்.

இவர் காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனைத் தேடி கடந்த 30 வருடங்களாகப் பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டிருந்தார். மனித உரிமை ஆணைக்குழுக்கள், ஆணைக்குழுக்களில் தனது மகனைத் தேடி வாக்குமூலங்கள் வழங்கியிருந்தார். எனினும், தனது மகனைக் காணாமலேயே அவர் உயிரிழந்துள்ளார்.

கேப்பாபிலவில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் போராட்டம் நடத்தும் இடத்தில் வியாழம்மாவுக்கு நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது. (ஐ)

## 13 கிலோ கஞ்சாவுடன் 20 வயது இளைஞர் கைது

### மற்றொருவர் தப்பி ஓட்டம்

மன்னார், ஜுலை 14

சவுத்பார் மன்னாருக்கு கடத்திச் செல்லப்பட்ட 13 கிலோ 770 கிராம் கஞ்சா போதைப்பொருளுடன் 20 வயதுடைய இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார். மற்றொருவர் தப்பிச் சென்றுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இலுப்பைக்கடவைப் பொலிஸ் பிரிவில் நேற்று முன் தினம் இரவு 10.30 மணியளவில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

மன்னார் சவுத்பார் பகுதியில் இருந்து மன்னார் நகருக்கு மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரைப் பொலிஸார் சோதனையிட வழிமறித்தனர். அவர்களில் ஒருவர் தனது அலைபேசி மற்றும் மோட்டார் சைக்கிள் ஆவணங்களைக் கைவிட்டுத் தப்பிச் சென்றார்.

20 வயதுடைய இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார். அத்துடன், அவர்களால் கடத்திச் செல்லப்பட்ட 13 கிலோ 770 கிராம் கஞ்சா போதைப் பொருள் பொதிகள் கைப்பற்றப்பட்டன. அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிளும் தடுத்துவைக்கப்பட்டுள்ளது.

விசாரணைகளின் பின்னர் கஞ்சா போதைப் பொருள் கைது செய்யப்பட்ட இளைஞர் மன்னார் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார். தப்பிச் சென்ற சந்தேகநபரைக் கைது செய்யும் நடவடிக்கையை இலுப்பைக் கடவைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

மன்னார் இலுப்பைக்கடவை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் வதுலியத்தவின் வழிகாட்டலில் உதவிப் பொலிஸ் பரிசோதகர் ஜே.ஜெயறோன் தலைமையிலான பொலிஸ் பிரிவினரே இந்தக் கஞ்சா கடத்தலை முறியடித்தனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## எதிர்க்கட்சித் தலைவரைச் சந்தித்த ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதி

கொழும்பு, ஜுலை 14

இலங்கை வந்துள்ள ஐரோப்பிய ஒன்றியத்திற்கான பயங்கரவாத எதிர்ப்பு ஒருங்கிணைப்பாளர் கில்லஸ் டி கெர்ச்சோவ் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்தார்.

இலங்கையில் பாதுகாப்பை வலுப்படுத்தும் செயற்பாடுகள் மற்றும் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் முயற்சிகளுக்கு எதிர்க்கட்சி முழுமையான ஆதரவை வழங்குமென எதிர்க்கட்சித் தலைவர் இங்கு ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதியிடம் உறுதியளித்துள்ளார். (ஐ)



## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தக் கட்சியினருக்கு இடம் கொடுக்க வேண்டும் என்று விடாப்பிடியாக நின்றவர் சிவஞானம். அதற்குச் சார்பாகப் பேசியவர் சுமந்திரன்.

இந்த இருவருக்குமே தெரியாமல் அக்கட்சியின் பிரகிருதிகள் மலையகத்துக்குப் போய் சேவல் அணியில் கூட்டுச் சேர்ந்து ஒப்பமிட்டு, படத்துக்கும் போஸ் கொடுத்து விட்டு வந்துவிட்டனர்.

இவ்விவகாரம் பற்றி ஊடகங்களில் செய்தி வந்ததும், கட்சியின் மிக முக்கிய பொறுப்பில் இருந்த ஒருவரை சிவஞானம் அவசர அவசரமாகத் தொடர்பு கொண்டார். என்ன தம்பி நடந்தது?" – என்று விசாரித்தாராம்.

எனக்கு எதுவும் தெரியாது. நான் மன்னாரில் நிற்கிறேன். அப்படி ஒன்றும் ஒப்பந்தம் செய்வதாகக் கட்சி ரீதியாக முடிவெடுக்கவில்லையே...!" – என்று கையை விரித்தாராம் அந்த முக்கிய பொறுப்பில் இருந்த இளைஞர்.

அப்படி என்றால், கட்சியில் முக்கிய பொறுப்புகளில் இருந்தவர்களுக்குத் தெரியாமல்தான் கட்சியின் செயலாளர் கதிர் கொட்டகலை வரைப் போய், ஒப்பமிட்டு, இ.தொ.காங்கிரஸ் அணியுடன் கூட்டுச் சேர்ந்தாரா என்று கேள்வி எழுந்தது.

இ.தொ.கா. தரப்பு, கூட்டு எதிரணியுடன் – மஹிந்த தரப்புடன் – தோளில் கைபோடுகின்றது. அந்தத் தரப்புடன் ஜனநாயகப் போராளிகள் கட்சியும் இணைந்து விட்டதா என்பதை விசாரித்து அறிவதற்காகக் கட்சியின் தலைவர் வேந்தன், கட்சியின் செயலாளர் கதிர் எல்லோருடனும் தொடர்பு கொள்ள முயன்றேன்.

தொலைபேசி அழைப்பு எடுத்துக் களைத்துவிட்டேன். காலையும், மாலையும் மாறி மாறி நான் எடுத்த தொலைபேசி அழைப்புகளுக்கு மறுபக்கத்தில் Ring போயிற்று. விடாமல் போயிற்று. ஆனால் யாருமே பதிலளிக்கவில்லை.

கட்சியின் பேச்சாளர் துளசியுடன் காலைக்கதிர் செய்தியாசிரியர் தொடர்பு கொள்ள முயற்சித்துத் தோற்றுப் போனார்.

என் ஊடக வாழ்வில் ஒட்டுமொத்தக் கட்சி ஒன்றே இப்படி ஒளித்துப் பிடித்து விளையாடும் அனுபவத்தை இப்போதுதான் பெற்றேன்.

அவளைத் தொடுவானேன்? அவலப்படுவானேன்?' – என்று ஒரு பேச்சு மொழி நம் மத்தியில் உண்டு.

அவர்கள் அழைத்தார்கள் என்றால் அதற்காக கொட்டகலை வரைப் போய் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டுமா? அதற்குப் பின்னர் ஊடகங்களுக்கு ஒளித்துப் பிடிக்க வேண்டுமா?

உள்ளதையும் கொடுத்தான் நொள்ளைக் கண்ணன்' என்பார்கள். அது போல கூட்டமைப்பில் தமக்குக் கிடைத்த கௌரவமான இடத்தை ஜனநாயகப் போராளிகள் கட்சி கோட்டை விட்டுவிட்டது என்றே நினைக்கிறேன். இனி அதைப் பழைய நிலையில் தக்க வைப்பது சிரமமே.

சரியோ, பிழையோ கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் வரதராஜப்பெருமாளின் கட்சியை எல்லாம் ஒதுக்கிய கூட்டமைப்பு, ஜனநாயகப் போராளிகள் கட்சிக்கு இடமளித்து, சில இடங்களில் அக்கட்சியின் வேட்பாளர்களைத் தனது பட்டியலில் நிறுத்தி கௌரவம் தந்தது.

அதை முன்னின்று செய்தவர் சி.வீ.கே.சிவஞானம். அந்த இடமளிப்பை இனிவரும் தேர்தல்களில் மேலும் விஸ்தரிப்பது அவர் திட்டம். ஆனால், எல்லாவற்றையும் மண்ணாக்கி விட்டார்கள்.

அண்மையில் நடந்த தனது தேசிய மாநாட்டில் கூட ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர், செயலாளருக்கு எல்லாம் அழைப்பு அனுப்பி, மாநாட்டிலும் முக்கிய இடமளித்து கௌரவித்தது தமிழரசுக் கட்சி.

அதையெல்லாம் செய்தவர் சிவஞானம்தான். அக்கட்சிக்கும் கூட்டமைப்புக்கும் இடையில் பிரதான பாலமாக விளங்கியவரும் அவரே.

தலைவர் பிரபாகரனின் இயக்க உறுப்பினர்களைக் கைவிட்டு விடக் கூடாது என்பதற்காக அவர்களை அரவணைத்து நின்றவர்.

ஜனநாயகப் போராளிகள் கட்சியினரை அரச புலனாய்வுத் துறையின் முகவர்கள்' என்று சம்பந்தன் உட்பட பலர் சீண்டிய போது மறுத்துரைத்து, அவர்களுக்காக ஏனைய கூட்டமைப்புத் தலைவர்களிடம் பரிந்து பேசியவரும் – பேசி வருபவரும் – சிவஞானம்தான்.

இப்போது அவருக்கே தெரியாமல் – ஒரு பேச்சுக்குத் தன்னும் அவருக்குத் தகவல் கொடுக்காமல் – புதுக்கூட்டில் போய் இணைத்திருக்கின்றது ஜனநாயகப் போராளிகள் கட்சி.

வானொலியிலும், தொலைக்காட்சியிலும் செய்தி பார்த்துத்தான் அக்கட்சி, தங்கள் கூட்டை விட்டுப் பறந்து விட்ட செய்தியை சிவஞானம் உட்படக் கூட்டமைப்பினர் அறியும் நிலைமை.

இனிமேல், கூட்டமைப்புக் கூட்டுக்குள் அக்கட்சியினருக்கு இடம் கல்தாதான் என்று நினைக்கிறேன்...!

\- மின்னல் -

காலைக்கதிர்
Kalaikathir



# வவுனியாவில் பல கிராமங்களுக்கு அமைச்சர் மனோ நேற்றுப் பயணம்







வவுனியா, ஜூலை 14

அமைச்சர் மனோ கணேசன் நேற்று வவுனியாவில் பல கிராமங்களுக்குச் சென்று மக்கள் சந்திப்புகளை மேற்கொண்டார்.

தமது அமைச்சின் ஊடாக ஒதுக்கப்பட்ட நிதியை மக்களின் தேவைகளை அறிந்து பகிர்ந்தளிக்கும் முகமாகவே அவரது இந்த விஜயம் இடம்பெற்றது.

இந்த விஜயத்தின்போது வவுனியா சிவபுரம், கற்பகபுரம், புதிய கற்பகபுரம், பம்பைமடு, மடுக்குளம், கோவில்மோட்டை, ஆச்சிபுரம், ஆனந்தபுரம், தரணிக்குளம், சிதம்பரபுரம், கற்பகபுரம், மதுரா நகர், ரம்பாவெட்டி, புதிய வேலவர் சின்னகுளம் ஆகிய கிராமங்களுக்கு அமைச்சர் சென்று சந்திப்புக்களை மேற்கொண்டார்.

இந்தச் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார், தேசிய அமைப்புச் செயலாளர் விநாயகமூர்த்தி ஜனகன், வடக்கு மாகாண அமைப்பாளர் விமல், ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரசாரச் செயலாளர் பரணிதரன், வவுனியா மாவட்ட அமைப்பாளர் நடராஜா, மன்னார் மாவட்ட அமைப்பாளர் தீபன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஐ - 100)


## போதைப் பொருள் தடுப்புக்கு யாழ். செயலகத்தில் தனிப் பிரிவு

ஜனாதிபதியின் அதிகவனம் ஈர்க்கப்பட்ட திட்டங்களில் ஒன்றான – போதையற்ற தேசத்தினை உருவாக்கும் சிந்தனைக்கு வலுச்சேர்க்கும் வகையில் – வடக்கு ஆளுநரின் ஆலோசனைக்கு அமைவாக யாழ் மாவட்டச் செயலகத்தில் போதைத் தடுப்பு பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப் பிரிவின் ஊடாக பொது மக்கள் வழங்கும் தகவல்களுக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என யாழ் அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

கஞ்சா, ஹேரோயின் போன்ற போதைப் பொருள் கடத்தல், விற்பனை தொடர்பான தகவல்களையும், பொது இடங்களில் மது அருந்துதல், சிகரெட் புகைத்தல் போன்ற தகவல்களையும், கள்ளச் சாராயம் மற்றும் கசிப்பு உற்பத்தி செய்யப்படும் இடங்கள் போன்ற தகவல்களையும் பொதுமக்கள் தெரியப்படுத்த விரும்பின் 021 222 7583 என்ற தொலைபேசி இலக்கத்திற்கும் 021222 3712 என்ற தொலைநகல் இலக்கத்திற்கும் drugfreejaffnagmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் அறியத்தரலாம் அல்லது கடிதம் மூலம் தெரிவிக்க விரும்புபவர்கள் போதைப் பொருள் தடுப்பு பிரிவு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தெரியப்படுத்தலாம்.

தகவல்கள் வழங்குபவர்கள் தொடர்பான விவரங்கள் இரகசியமாகப் பேணப்படும் – என்று அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

# தங்கம் சுத்தமாக்கும் இரசாயனம் என்ற போர்வையில் சஹ்ரான் குழுவினர் வெடிகுண்டுகளைக் கடத்தினர்!




கொழும்பு, ஜூலை 14

சவுதியில் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு அழைத்துவரப்பட்ட தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் ஆயுதப் பிரிவின் பொறுப்பாளராக இருந்த அஹ்மத் மிலன் வெடிகுண்டுகளைத் தயாரித்திருப்பது தெரிய வந்துள்ளது.

பயங்கரவாத விசாரணைப் பிரிவு அதிகாரிகளின் விசாரணையில் இந்த தகவல்களை அவர் வெளியிட்டுள்ளார்.

சஹ்ரான் தலைமையிலான இந்தப் பயங்கரவாதக் குழுவின் ஆயுத தயாரிப்புக்காக கிழக்கில் ஐந்து வீடுகளை வாடகைக்கு எடுத்துள்ளனர். கல்முனைச் சேர்ந்த சியாம் மற்றும் முகமது நிசான் இதற்கு உதவியுள்ளனர்.

நீர்கொழும்பில் தயாரிக்கப்பட்ட வெடிபொருள்கள் லொறியொன்றின் மூலம் சம்மாந்துறைக்குக் கொண்டு செல்லப்பட்டன. அதன் சாரதியான பிரசன்னா என்பவரிடம், தங்கத்தைச் சுத்தம் செய்யும் இரசாயனங்கள் எனக் கூறியே பீப்பாய்கள் ஏற்றப்பட்டுள்ளன.

நீர்கொழும்பில் இருந்து சம்மாந்துறைக்கு வெடிபொருள்களை அனுப்பிய தௌஹீத் ஜமாத் பயங்கரவாதிகள் அனைவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஐ)

# ஜனாதிபதி ஆணைக்குழுவின் பதவிக்காலம் 3 மாதம் நீடிப்பு

அரசநிறுவனங்களில்இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல் மோசடிகள் தொடர்பில்விசாரணைசெய்யஅமைக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பதவிக் காலம் 3 மாதங்களால் நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆணைக்குழுவின் பதவிக் காலம் எதிர்வரும் 18 ஆம் திகதியுடன் நிறைவடைய விருந்தது.

கால நீடிப்பின் பின்னர் ஜனாதிபதி ஆணைக்குழுவின் பதவிக்காலம் ஒக்டோபர் 18 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

# முல்லைத்தீவில் காற்றால் சேதமுற்ற வீடுகளை புனரமைக்க நடவடிக்கை

முல்லைத்தீவு, ஜூலை 14

முல்லைத்தீவில் நேற்று முன்தினம் ஏற்பட்ட மழையுடன் கூடிய காற்றினால் சேதமடைந்த வீடுகளைப் புனரமைப்பதற்கான உடனடி நடவடிக்கைகளை பிரதேச செயலகம் மேற்கொண்டுள்ளது.

இதற்கான நிதியைப் பெற்றுக் கொள்வதற்கு இடர் முகாமைத்துவ மத்தியநிலையத்துடன்தாம்தொடர்பு கொண்டிருப்பதாக முல்லைத்தீவு மேலதிக மாவட்ட செயலாளர் கே.தனபாலசுந்தரம் தெரிவித்தார்.

சேதமடைந்த வீடுகள் தொடர்பான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 130, 000 ரூபா நிதியைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். நேற்று முன்தினம் வீசிய காற்றினால் 13 வீடுகள் சேதமடைந்திருக்கின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

# தொண்டமானும், பங்காளிகளும் எம்மிடம் பாடம் கற்கவேண்டும்!

## வேலுகுமார் எம்.பி. தெரிவிப்பு

வவுனியா, ஜூலை 14

கூட்டணி அரசியல் என்றால் என்னவென்பதை ஆறுமுகன் தொண்டமானும் அவரின் பங்காளிகளும் தமிழ் முற்போக்கு கூட்டணியிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும் – என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித்தலைவரும், இந்து சமய விவகார அமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்தார்.

வவுனியா சிவபுரம் பகுதியில் நேற்றுமுன்தினம் காலை நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொள்வதற்காக வருகை தந்திருந்த வேலுகுமார் எம்.பியிடம், மலையகத்தில் புதிதாக உதயமாகியுள்ள கூட்டணி தொடர்பில் ஊடகவியலாளர்கள் சிலர் கேள்விகளை எழுப்பினர்.

இதற்கு பதிலளித்த அவர் கூறியதாவது:-

பல்வேறு விட்டுக்கொடுப்புகளுக்கு மத்தியிலேயே மக்கள் நலன் கருதி இற்றைக்கு நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ் முற்போக்கு கூட்டணியை உருவாக்கினோம்.

ஆனால் பத்தோடு பதினொன்றாக இந்தக் கூட்டணியும் காணாமல்போய்விடும் என்றும் அதில் அங்கம் வகிக்கும் கட்சிகளால் பெரிதாக எதையும் சாதித்துவிட முடியாது எனவும் சிலர் ஏளனமாக விமர்சித்துப் பேரின்பமடைந்தனர்.

இவ்வாறு சரமாரியாக விமர்சனக் கணைகளைத் தொடுத்தவர்களுக்கு செயற்பாடுகள் மூலமாகவே பதிலடிகொடுத்தோம். இன்று எம்மால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி மற்றும் உரிமை அரசியலைக்கண்டு சில கட்சிகள் விழிபிதுங்கி நிற்கின்றன.

குறுகிய காலப்பகுதிக்குள் வெற்றிக் கூட்டணியாக முற்போக்கு கூட்டணி வலம் வருவதால் அடுத்து என்ன என்பது புரியாமல் அந்தக் கட்சிகள் திண்டாடிக்கொண்டிருக்கின்றன.

குறிப்பாக தனித்து இயங்குவதைவிட கூட்டாகச் செயற்பட்டால் தடைக்கற்களைக்கூட படிக்கற்களாக மாற்றி இலக்கைநோக்கி பயணிக்கலாம் என்பதை வெற்றிகரமாக நிரூபித்துக்காட்டியுள்ளோம்.

எனவேதான் கூட்டணி அரசியலின் முக்கியத்துவத்தை ஆறுமுகன் தொண்டமானும் அவரின் சகாக்களும் தற்போது உணர ஆரம்பித்துள்ளனர். இதையடுத்தே பதறியடித்துக்கொண்டு – அரசியல் அநாதைகளையெல்லாம் ஒன்றுதிரட்டி கூட்டணி அமைப்பதற்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர்கள் பெரும் பாடுபடுகின்றனர்.

கூட்டணி அமைப்பதற்கான உரிமை அவர்களுக்கு இருக்கின்றது. தேவையேற்படின் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புடன் கூட கூட்டணி வைத்துக்கொள்ளட்டும். அதில் எமக்கு எவ்வித பிரச்சினையும் இல்லை. அதேபோல் இ.தொ.காவுக்குக் கூட்டணி அனுபவமும் இல்லை என்பதையும் கூறியாகவேண்டும்.

எனவே, கூட்டணி அரசியல் என்றால் என்ன, அதை எவ்வாறு முன்னெடுப்பது, அதன் ஊடாக எப்படி மக்களுக்காக அரசியல் செய்வது என்பன உட்பட கூட்டணி தொடர்பில் மேலும் பல விடயங்களை தமிழ் முற்போக்கு கூட்டணியிடமிருந்து தொண்டாவும், அவரின் சகாக்களும் கற்றுக்கொள்ளவேண்டும்.

திட்டமிடாத விடயங்கள் திசைமாறியே பயணிக்கும். சிலவேளை இடைநடுவிலேயே நின்றுவிடும். இ.தொ.காவின் கூட்டணிக்கும் இப்படியொரு நிலைமை வந்துவிடக்கூடாது என இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

அரசியலில் என்றும் ஆரோக்கியமான போட்டியை நாம் எதிர்பார்க்கின்றோம். புதுக்கூட்டணிகளின் வருகையானது எம்மை மேலும் உற்சாகப்படுத்தும் என திடமாக நம்புகின்றோம். எனவே, எடுத்தோம், கவிழ்த்தோம் என கூட்டணி அமைக்காமல் – பெயர் கூட வைக்காது மூக்குடைபட்டு நிற்காமல் – தமிழ் முற்போக்கு கூட்டணியிடம் பாடம்கற்று பயன் பெறுமாறு கேட்டுக்கொள்கின்றோம் – என்றார். (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## அர்த்தமற்ற அபத்தப் பேச்சுக்கள்

ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்கடிக்கப்பட்டு விட்டது.

அந்தப் பிரேரணையைக் கொண்டு வந்த தரப்புகள் அதனால் வெப்பியாரத்தில் இருக்கின்றன. அந்தப் பிரேரணையைத் தோற்கடிப்பதற்கு உதவிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அதனால் அவை வசைபாடுகின்றன.

"அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்து புதிய அரசு ஒன்று உருவாகுவதற்கோ அல்லது தேர்தல் ஒன்றுக்குச் செல்வதற்கோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடவடிக்கை எடுத்திருக்கலாம்." – என்பது கூட்டு எதிரணியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் தினேஷ் குணவர்த்தனவின் ஆதங்கம்.

தமிழருக்கு எதுவுமே செய்யாத இந்த அரசாங்கத்தைத் தமிழ்க் கூட்டமைப்பு ஏன் பாதுகாத்தது என்று தெரியவில்லை எனவும் அவர் கூறியிருக்கின்றார்.

பிரதேச செயலகத்துக்காக தேசிய பாதுகாப்பைக் காட்டிக்கொடுத்துள்ளது தமிழ்க் கூட்டமைப்பு என்று கொச்சைப்படுத்தியிருக்கின்றார் மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பியின்) தலைவர் அநுரகுமார திஸநாயக்கா.

ஒட்டுமொத்தத் தமிழர்களின் மனநிலையை – கருத்து நிலைப்பாட்டை – புரியாமல் இந்தத் தலைவர்கள் பேசுகின்றார்களோ என்ற சந்தேகம் எமக்கு எழுகின்றது.

அரசுக்கு எதிராக இந்த வாக்களிப்பில் வாக்களிப்பதன் மூலம் புதிய அரசு ஒன்றுக்கு செல்வதற்கோ அல்லது தேர்தல் ஒன்றுக்குச் செல்வதற்கோ தமிழ்க் கூட்டமைப்பு வழி செய்திருக்கலாம் என்ற தினேஷ் குணவர்த்தனாவின் கூற்று அபத்தமானது; அர்த்தமேயற்றது.

இருக்கின்ற ரணிலின் அரசை வீழ்த்தினால், மாற்று அரசு அமைப்பதற்கான நாடாளுமன்றப் பலம் யாரிடம் இருக்கின்றது?

தப்பித் தவறி உதிரிகளை எல்லாம் தேடிக் கூட்டி அள்ளி, மஹிந்த ராஜபக்ஷவுடன் சேர்ந்து தினேஷ் குணவர்த்தனா போன்றோர் ஆட்சி அமைக்கக் கூடும்.

அவர்களின் ஆட்சி எப்படி அமையும் என்ற பட்டறிவு – அனுபவப்பாடம் – தமிழர்களுக்கு ஏலவே தாராளமாக உண்டு. "சூடு கண்ட பூனை அடுப்பங்கரை நாடாது" என்பார்கள். மஹிந்த அரசு என்ற பாலின் சூட்டை நன்கு அறிந்தவர்கள் தமிழர்கள். மீண்டும் மஹிந்தர் ஆட்சிக்கு இடம்கொடுக்கும் வகையில் இந்த அரசைக் கவிழ்ப்பதற்குத் தமிழர்கள் துணை போவார்களேயானால் அவர்களின் நிலைமை 'சட்டியிலிருந்து அடுப்புக்குள் விழுந்த கதை' போன்றாகி விடும் என்பது வெட்ட வெளிச்சமான விடயம்.

அடுத்தது, இந்த அரசைக் கவிழ்ப்பதன் மூலம் புதிய தேர்தல் ஒன்றுக்கு வழி செய்திருக்க முடியும் என தினேஷ் குணவர்த்தனா கூறுகின்றமை காதில் பூச்சுற்றும் வேலையன்றி வேறில்லை.

இந்த அரசு கவிழ்ந்தாலும் சரி, அல்லது இதற்குப் பிறகு வரக் கூடிய அரசு கவிழ்ந்தாலும் சரி, அடுத்த பெப்ரவரிக்கு முன்னர் – தற்போதைய நாடாளுமன்றின் முதல் நான்கரை வருட ஆட்சிக் காலம் முடியுமுன்னர், இந்த நாடாளுமன்றத்தை ஜனாதிபதியோ, வேறு தரப்புகளோ கலைப்பதற்கோ, அதன் மூலம் தேர்தலுக்குச் செல்வதற்கோ வாய்ப்பேயில்லை.

நாடாளுமன்றம், தானே தன்னைக் கலைப்பதற்கான பிரேரணை ஒன்றை மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் நிறைவேற்றினாலன்றி இந்த நாடாளுமன்றத்தைக் கலைப்பதோ, புதிய பொதுத் தேர்தல் ஒன்றுக்குச் செல்வதோ சாத்தியமேயற்றது என்பதுதான் அரசமைப்புச் சட்ட ஏற்பாடாகும்.

ஆகவே, ரணிலின் அரசைக் கவிழ்த்து புதிய தேர்தலுக்குத் தமிழ்க் கூட்டமைப்பு வழி செய்திருக்கலாம் என்ற தினேஷ் குணவர்த்தனாவின் பேச்சு, அரசியல் பார்வை ஏதுமற்ற பிதற்றலாகும். சாத்தியமேயாகாத உரையாகும்.

பிரதேச செயலகத்துக்காகத் தேசிய பாதுகாப்பைக் காட்டிக் கொடுத்தது தமிழ்க் கூட்டமைப்பு என்ற ஜே.வி.பியின் வாதமும் அர்த்தமற்றது.

இந்த அரசைக் கலைத்து விட்டு, ஜே.வி.பி. கொண்டு வர விரும்பும் மாற்று அரசு எது? அதில் ஜே.வி.பிக்குத் தெளிவில்லை.

உயர் நீதிமன்றுக்குப் போய், வடக்கு, கிழக்கைப் பிரித்து, தமிழரின் எதிர்காலத்தைக் கேள்விக்குள்ளாக்கி, அவர்களை நட்டாற்றில் விட்டது ஜே.வி.பிதான்.

சிறுபான்மையினர், பெரும்பான்மை மேலாதிக்கத்தின் பேரினவாதத் தீயில் வெந்து கருகிக் கொண்டிருக்கும் இன்றைய நிலையில், ரணில் அரசைக் கலைப்பதன் மூலம், உருவாக்கக் கூடிய மாற்று அரசு குறித்துத் தெளிவான பார்வை ஏதுமின்றி, இந்த அரசைக் கலைக்கச் செய்து மீண்டும் ஒரு தடவை சிறுபான்மையினரை நட்டாற்றில் பரிதவிக்க விடுவதற்கு ஜே.வி.பி. தூபம் போடுகின்றது போலும்.

இந்தப் பேச்சுக்கள் கறிக்குதவாதவை. அவற்றைப் புறகணித்து நிற்பதுதான் தமிழருக்குப் பொருத்தமானதாகும்.

# கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் வடமாகாண ஆளுநருடன் சந்திப்பு



கிளிநொச்சி, ஜூலை 14

கிளிநொச்சி மாவட்ட விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கும் கௌரவ ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனுக்கும் இடையில் சந்திப்பு நேற்று முன் தினம் மாலை கிளிநொச்சி மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றது.

சிறுபோகத்தின் அறுவடை நெருங்கிவரும் காலப்பகுதியில் கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் எதிர்நோக்கும் சவால்கள் மற்றும் தேவைகள் குறித்து அறிந்துகொள்ளும் பொருட்டு ஆளுநர் இந்த கலந்துரையாடலை ஏற்பாடு செய்திருந்தார்.

இதன்போது இரணைமடு குளத்தின் நீரைச் சரியான முறையில் விவசாயிகளால் முகாமைத்துவம் செய்ய முடிந்தமையால் வழமையாக மேற்கொள்ளும் ஏக்கர் அளவைவிட 4 மடங்கு அதிகமாக நெல் பயிரப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட விவசாயிகள், அறுவடையின் பின் அவற்றைச் சேமித்து வைப்பதற்கான களஞ்சிய வசதிகளை ஏற்படுத்தி தருமாறும், நெல்லினை சந்தைப்படுத்துவதற்கு ஏற்ற சரியான வழிமுறைகளை மேற்கொண்டு வழங்குமாறும் கோரிக்கை விடுத்தனர். அத்துடன் முன்பு நடைமுறை யிலிருந்த உழவர் சந்தை முறைமையினை மீண்டும் உருவாக்கி வழங்குமாறும் இதன்போது கோரிக்கை விடுத்தனர்.

இதேவேளை, அறுவடைக்காலத்தில், அறுவடைக்காக பயன்படுத்தும் இயந்திரங்கள் மற்றும் அறுவடை வேலையாளர்களுக்கு ஊதியம் வழங்கவேண்டியுள்ளதால் அந்தக் காலப்பகுயியில் விவசாயிகள் பொருளாதார சிக்கல்களுக்கு முகம்கொடுத்து வருவதனை குறிப்பிட்டுக் காட்டியதுடன், அக்காலப்பகுதியில் விவசாயிகளுக்கு கடனுதவிகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் ஆளுநரைக் கேட்டுக்கொண்டனர்.

வடமாகாண விவசாயத் திணைக்களத்தின் ஊடாக விவசாயிகளுடன் கலந்துரையாடி பொருத்தமான இடங்களில் நெல் களஞ்சிய சாலைகளை உருவாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் ஏற்கனவே உள்ள களஞ்சியசாலைகளை புனரமைக்குமாறும் வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் கே.தெய்வேந்திரத்துக்குப் பணிப்புரை வழங்கிய ஆளுநர், விவசாயிகள் பொருளாதார ரீதியில் பாதிப்படையாத வகையில் நெல் விற்பனையை மேற்கொள்ளுவதற்கு இதுதொடர்பில் செயற்படும் அதிகாரிகளுடன் கலந்துரையாடி நடவடிக்கை மேற்கொள்வதாகவும் குறிப்பிட்டார்.

இதேவேளை, அறுவடை காலத்தில் விவசாயிகளின் பொருளாதார சிக்கலைத் தீர்ப்பதற்கு வடமாகாண கூட்டுறவு வங்கிகளினூடாக கடன் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு எதிர்பார்ப்பதாக குறிப்பிட்ட ஆளுநர், வடமாகாண விவசாய அமைச்சு இதுதொடர்பில் ஆராய்ந்து கூடியவிரைவில் நடவடிக்கை எடுக்குமாறும் வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கினார்.

அத்துடன் உழவர் சந்தையினை தான் வரவேற்பதாக குறிப்பிட்ட ஆளுநர், விவசாயிகள் தமது விளைச்சல்களை இடைதரகர்கள் இல்லாது நேரடியாகவே நுகர்வோருக்கு வழங்குவதற்கு இம்முறைமை வழிவகுக்கும் என்பதை குறிப்பிட்டதுடன் அபிவிருத்தியடைந்த நாடுகளில் உழவர் சந்தைகள் மிகுந்த பிரபல்யம் பெற்றுள்ளமையைச் சுட்டிக்காட்டியதுடன், விவசாயிகளுடன் கலந்துரையாடி வடமாகாணத்தில் உழவர் சந்தைகளை மேற்கொள்ளக்கூடிய பொருத்தமான இடங்களை இனங்காணுமாறும் வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளரை ஆளுநர் கேட்டுக்கொண்டார். (ஐ)

# கூட்டமைப்பு எம்.பிக்களுக்கு 5 கோடி ரூபா அபிவிருத்தி நிதி

## பிரேரணையை எதிர்க்க வழங்கியதாம் அரசு




கொழும்பு, ஜூலை 14

தனியான கல்முனை பிரதேச செயலகத்தை அமைத்து தருவதாக இலங்கை அரசு கொடுத்த வாக்குறுதிக்கு அமையவே, அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வாக்களித்தது என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் தயாசிறி ஜயசேகர குற்றம் சாட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும், அபிவிருத்தி தேவைகளுக்கான நிதியாக 5 கோடி ரூபாவை ஒதுக்குவதாகவும், அரசு வாக்குறுதி கொடுத்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உதவியின்றித் தற்போதைய அரசு செயற்பட முடியாது என்பது வெளிப்படையாகியுள்ளது.

எனவே, இதனை ஐ.தே.க. – கூட்டமைப்பு அரசு என்றே கூற வேண்டும் – என்றார். (ஐ)

## வைசபரிபாலன சபையில் முழுநிலைநாள் ஆன்மீக சொற்பொழிவு

சைவபரிபாலனசபையினர் பிரதி பூரணைதினத்தன்று ஆன்மீகச்சொற்பொழிவொன்றைநடத்துவதற்கு தீர்மானித்து, நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணிக்கு ஏற்பாட்டை மேற்கொண்டுள்ளார்கள். சபையின் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் திருமிகு பிரம்மஸ்ரீ நவ நீத கிருஷ்ணசர்மா அவர்களால் ஆன்மீகச்சொற்பொழிவுநிகழ்த்தப்படும்.

சைவ அன்பர்கள், அபிமானிகள், ஆர்வலர்கள் கலந்து பயன் பெறுமாறு அழைக்கப்படுகின்றனர். ஒருமணிநேரம் நடைபெறும். நிகழ்வில் கலந்து கொள்பவர்களுக்கு தேநீர், சிற்றுண்டி வழங்கப்படும் என்று சபையினர் அறிவித்துள்ளனர்.

## நாளை

15.07.2019
திங்கட் கிழமை

நட்சத்திரம்: மூலம் மு.இ 8.27 வரை
திதி : சதுர்த்தசி பி.இ 2.46 வரை

இராகுகாலம் : 7.30 – 9.00
சுப நேரம் : 12.00 – 1.30

# கட்டுநாயக்கவில் இறங்கிய அமெரிக்க சரக்கு விமானம்!

## அக்சா உடன்பாட்டுக்கு அமைய அந்நாட்டுப் படைக்கு விநியோகப் பொருள்களுடன் வந்ததா என்று சந்தேகம்?

**கொழும்பு, ஜூலை 14**
**அமெரிக்க சரக்கு விமானம் ஒன்று நேற்றுமுன்தினம் அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்கியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அமெரிக்காவின் வெஸ்ரேன் குளோப் எயர்லைன் நிறுவனத்துக்குச் சொந்தமான மக் டோனல் டக்ளஸ் 11 விமானமே நேற்று முன்தினம் அதிகாலை 3.47 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்கியுள்ளது. அமெரிக்கத் தயாரிப்பான இந்த விமானம் நீண்ட தொலைவுக்கு பெருமளவு சரக்குகளை ஏற்றிச் செல்லக் கூடியது.**




டபிள்யூ.ஜி.என். 1710 என்ற இலக்கமுடைய இந்த விமானம், பஹ்ரெய்னில் இருந்து கட்டுநாயக்க வந்துள்ளது. முன்னதாக, ஜேர்மனியின் பிராங்போர்ட் நகரில் இருந்து இந்த விமானம் பஹ்ரெய்னுக்குப் பயணம் மேற்கொண்டிருந்தது.

அண்மைக் காலத்தில் இந்த விமானம், அமெரிக்கப் படைத்தளங்கள் அமைந்திருந்த பல நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டிருந்ததாக தகவல்கள் கூறுகின்றன.

குறிப்பாக, ஜூலை 5ஆம் திகதி கட்டாரில் உள்ள விமானப்படைத் தளத்துக்கும், ஜூலை 2ஆம் திகதி இத்தாலியின் கட்டானியாவில் உள்ள விமானப்படைத் தளத்துக்கும் இந்த விமானம் பயணம் செய்துள்ளது.

அண்மைக் காலத்தில் இந்த விமானம் பெரும்பாலும், ஏனைய நகரங்களில் உள்ள அமெரிக்கத் தளங்களுக்கு அல்லது அல்லது இராணுவ நிலைகள் அமைந்துள்ள இடங்களுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளது.

அத்துடன், வெஸ்ரேன் குளோப் எயர்லைன் நிறுவனத்தின் முக்கியமான வாடிக்கையாளராக அமெரிக்கப் பாதுகாப்புத் திணைக்களம் இருக்கிறது என்றும், அந்த நிறுவனத்தின் அதிகாரபூர்வ இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்கியுள்ள இந்த விமானம் அக்சா உடன்பாட்டுக்கு அமைய, அமெரிக்கப் படையினருக்கான விநியோகப்பொருள்களுடன்வந்துள்ளதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

முன்னதாக, இந்த உடன்பாட்டுக்கு அமைய அமெரிக்க கடற்படையின் யு.எஸ்.எஸ். ஜோன் சி ஸ்ரெனிஸ் என்ற போர்க்கப்பல், கட்டுநாயக்க ஊடாக விநியோகப் பொருள்களை பெற்றிருந்தது.

பஹ்ரெய்னில் இருந்து சரக்கு விமானங்களில் கட்டுநாயக்கவுக்கு கொண்டு வரப்பட்ட பொருள்கள், யு.எஸ்.எஸ். ஜோன் சி ஸ்ரெனிஸ் கப்பலுக்குசிறிய விமானங்கள் மூலம் எடுத்துச் செல்லப்பட்டிருந்தன.

இந்த விநியோகப் பொருள்கள் இலங்கையின் சுங்க அதிகாரிகளாலோ அல்லது வேறு பாதுகாப்பு அதிகாரிகளாலோ சோதனையிடப்படவில்லை.

அதேவேளை தற்போது, யு.எஸ்.எஸ். ஜோன் சி ஸ்ரெனிஸ் கப்பல் அமெரிக்காவில் தரித்து நிற்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஈரானுடனான பதற்றத்தை அடுத்து அமெரிக்கா யு.எஸ்.எஸ். ஆபிரஹாம் லிங்கன் என்ற போர்க்கப்பலைப் பாகிஸ்தானுக்கு அருகே, ஓமான் வளைகுடாவில் நிறுத்தியுள்ளது.

இந்தக் கப்பலுக்கான விநியோகப் பொருள்களுடனேயே சரக்கு விமானம் கட்டுநாயக்கவுக்கு வந்துள்ளதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

அமெரிக்கச் சரக்கு விமானம் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்திருப்பதை உறுதிப்படுத்தியுள்ள விமான நிலைய அதிகாரிகள், அதிலுள்ள சரக்குகள் தொடர்பாக விளக்கமளிக்கவில்லை.

அதேவேளை இந்த விமானம் தொடர்பாக தமக்கு எதுவும் தெரியாது என ஸ்ரீலங்கன் விமான சேவை தெரிவித்துள்ளது.

இந்த விமானத்தின் இயக்கத்தில் தாங்கள் தலையிடவில்லை என்று இலங்கை விமானப்படை உறுதிப்படுத்தியுள்ளது. விமானத்துக்குள் உள்ள சரக்குகள் ஆய்வுக்கு உட்படுத்தப்படவில்லை என இலங்கைச் சுங்கத் திணைக்கள அதிகாரிகளும் உறுதிப்படுத்தியுள்ளனர். (ஐ)

# அரசுடன் ஜே.வி.பிக்கு மறைமுகத் தொடர்பு

## கூட்டு எதிரணி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 14
மக்கள்விடுதலை முன்னணியினால் அரசுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையின் நோக்கம், முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையினால் தனிமைப்படுத்தப்பட்ட அரசைக் காப்பாற்றுவதே ஆகும் என கூட்டு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு நெலும் மாவத்தையில் அமைந்துள்ள பொதுஜன பெரமுன பிரதான காரியாலயத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் கூறினார்.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை வெற்றி கொள்ள ஆதரவு வழங்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் மற்றும் அரசிலுள்ள கத்தோலிக்க உறுப்பினர்கள் ஆகியோருடன் பேச்சு நடத்தாமல்விட்டதிலும் உள்நோக்கம் காணப்படுவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ஐ)

# மின்தடை

யாழ்ப்பாணம், ஜூலை 14
உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்புமற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை–

**யாழ் பிரதேசத்தில் -**
காளிகோவிலடி, வதிரி, தேவரையாளி, திக்கம், சித்திவிநாயகர், மனோகரா, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, உடுப்பிட்டி, வாசிகசாலை, வல்லை, பொக்கணை, கெருடாவில், தொண்டமானாறு, செல்வச்சந்நிதி, வளலாய், மயிலியதனை, சிதம்பராக் கல்லூரி ஆகிய பிரதேசங்களில், மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# மஹிந்த ஆட்சிக் காலத்தில் தகுதியற்ற இராஜதந்திரிகள்

## சாடுகிறார் அமைச்சர் திலக் மாரப்பன

கொழும்பு, ஜூலை 14
அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான், ஆஸ்திரேலியா, பிரான்ஸ் உள்ளிட்ட முக்கியமான 8 நாடுகள் உள்ளிட்ட 26 நாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களில், ஒன்பது நாடுகளில் இருந்த தூதுவர்கள் மாத்திரமே, துறைசார் இராஜதந்திரிகளாக இருந்தனர் என்று வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார்.



வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பனவின் இந்தப் பதிலை அரச கொரடாவான அமைச்சர் கயந்த கருணாதிலக நேற்று முன் தினம் நாடாளுமன்றத்தில் வெளியிட்டார்.

ஜே.வி.பி. உறுப்பினர் நளின் ஜெயதிஸ்ஸ எழுப்பிய கேள்விக்கே இந்தப் பதில் அளிக்கப்பட்டது.

கடந்த ஆட்சிக்காலத்தில் 26 நாடுகளில் இருந்த இலங்கைத் தூதரகங்களில் 17 தூதரகங்களில் துறைசார் இராஜதந்திரிகள் அல்லாதோரே தூதுவர்களாகப் பணியில் அமர்த்தப்பட்டிருந்தனர்.

அந்த 17 பேரில், இரண்டு பேர் க.பொ.த. உயர்தரக் கல்வியை மட்டும் பூர்த்தி செய்தவர்கள். ஏனையவர்கள் பட்டம் பெற்றிருந்தபோதும், வெளிவிவகாரச் சேவையுடன் தொடர்பில்லாதவர்கள்–என்றார். (ஐ)

# நம்பிக்கையில்லாப் பிரேரணையை கூட்டமைப்பேதான் தோற்கடித்தது!

கொழும்பு, ஜூலை 14
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவினால்தான், அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்கடிக்கப்பட்டது என மஹிந்த ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா குற்றம் சுமத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

கூட்டமைப்பின் ஆதரவு இல்லாவிட்டால் நிச்சயமாக அரசால் வெற்றி பெற்றிருக்க முடியாது. மீண்டும் ரிஷாத் பதியுதீனுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படுமாக இருந்தால் அதனூடாக ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசை நிச்சயமாகத் தோற்கடிப்போம்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் 70 வீத வாக்குகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒருவராக இருக்க வேண்டும். அவ்வாறாயின் அவர் 65 இலட்சம் வாக்குகளைப் பெற்றுக் கொள்ள கூடிய ஒருவராக இருக்கவேண்டும். கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின்போது கிடைத்த வாக்குகளின் அடிப்படையில் இந்த 65 இலட்சம் வாக்குகளை எவ்வாறு பெற்றுக்கொள்வது என்பதை மிக இலகுவாகத் தீர்மானிக்க வேண்டும்.

இறுதியாக இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலின்போது ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்கு மாத்திரம் 50 இலட்சம் வாக்குகள் கிடைக்கப்பெற்றிருந்தன.

ஆகவே 50 வீதமான வாக்குகளை பொதுஜன முன்னணியால் பெற்றுக்கொள்ள முடியும். இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியும் சுதந்திரக் கட்சியும் இணைந்து போட்டியிடுமாக இருந்தால் நிச்சயமாக தேர்தல் எங்களுக்குச் சாதகமாகவே அமையும்–என்றார். (ஐ)

## தேசத்துரோக குற்றத் தீர்ப்புக்கு எதிராக வைகோ மேன்முறையீடு!

**சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல்**



தேசத் துரோக வழக்கில் விதிக்கப்பட்ட ஓராண்டு சிறை தண்டனையைஎதிர்த்துசென்னை உயர் நீதிமன்றத்தில் வைகோ மேன்முறையீடு செய்துள்ளார்.

தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கடந்த 2009 இல் புத்தக வெளியீட்டு விழாவில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகவும், இந்திய அரசுக்கு மற்றும் இந்திய இறையாண்மைக்கு எதிராகவும் பேசினார் என ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ மீது தேசத்துரோக வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

சென்னை எம்.பி. மற்றும் எம்.எல்.ஏ.க்கள் மீதான வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம் இந்தவழக்கைவிசாரித்துவந்தது. 2009 ஆம் ஆண்டில் பதிவான வழக்கில்சிறப்புநீதிமன்றம்கடந்த 5 ஆம் திகதி தீர்ப்பு வழங்கியது.

தேசத்துரோக வழக்கில் வைகோ குற்றவாளி என சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பு அளித்தது. தண்டனையை அன்றே வழங்குமாறு நீதிமன்றத்தில் வைகோ கோரிக்கை வைத்தார்.

இதனை அடுத்து வைகோவுக்கு ரூ.10 ஆயிரம் அபராதமும், ஓராண்டு சிறைதண்டனையும் விதித்து சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

இந்நிலையில், தனக்கு எதிரான குற்றச்சாட்டுகள் முழுமையாக நிரூபிக்கப்படாத நிலையில் தண்டனை வழங்கியமை தவறு என வைகோ தெரிவித்து உள்ளார். தண்டனையை எதிர்த்து அவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்துள்ளார். இந்த மேன்முறையீட்டு மனு உயர்நீதிமன்றத்தில் விரைவில் விசாரணைக்கு வருகிறது.

# ஈஸ்டர் தாக்குதல்கள் விசாரணையை ஒட்டி நேற்று சென்னையில் தேடுதல் நடவடிக்கை

## தேசியப் புலனாய்வு முகமை அதிகாரிகள் கொச்சியிலிருந்து விசேடமாக வருகை

சென்னை,ஜூலை14

**இலங்கையில் நடந்த தொடர் குண்டுவெடிப்புத் தாக்குதல்கள் குறித்து விசாரணை நடத்தி வரும் தேசிய புலனாய்வு முகமை அதிகாரிகள் நேற்று சென்னையில் திடீர் சோதனையில் ஈடுபட்டனர்.**




ஈஸ்டர் தினத்தன்று, ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பானது இலங்கையில் தொடர் குண்டுவெடிப்புத் தாக்குதலை நிகழ்த்தியது. இதில் 250க்கும் அதிகமானோர் உயிரிழந்தனர். இந்த தற்கொலைப் படைத் தாக்குதலை நிகழ்த்திய தீவிரவாதிகளுடன் தமிழகம் மற்றும் கேரளாவைச் சேர்ந்த சிலருக்கு தொடர்பு இருப்பதாக இலங்கை உளவுத்துறை கூறி இருந்தது.

இதன்படி, கேரளாவிலும், தமிழகத்திலும் என்.ஐ.ஏ. எனப்படும் தேசிய புலனாய்வு முகமை அதிகாரிகள் சோதனை மேற்கொண்டு பலரைக் கைது செய்தனர். பலரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த நிலையில் கொச்சியில் உள்ள அலுவலகத்தில் இருந்து நேற்று சென்னை வந்த என்.ஐ.ஏ. அதிகாரிகள் குழு, மண்ணடி லிங்கி செட்டி தெருவில் உள்ள 'இஸ்லாமிக் ஹிண்ட்' என்ற அமைப்பின் அலுவலகத்தில் சோதனை நடத்தி வருகிறது. இதுபோல் புரசைவாக்கத்தில் இஸ்லாமிய அமைப்பின் மாநிலத் தலைவர் முகமது புகாரி வீட்டிலும் பொலிஸார் சோதனை நடத்தினர்.

அந்த அமைப்பைச் சேர்ந்த சிலர், கேரளாவில் கைது செய்யப்பட்டுள்ளவர்களிடம் தொடர்பில் இருந்தனர் எனக் கூறப்படுகிறது. அதன் அடிப்படையிலேயே சோதனை நடத்தப்பட்டு வருவதாக நேற்றுப் பகல் கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேபோல் நாகப்பட்டினத்தில் மஞ்சகொல்லை, சிக்கல் ஆகிய இடங்களில் அசன் அலி, ஹாரீஸ் முகமது ஆகியோர் வீடுகளிலும் நேற்று சோதனை நடைபெற்றது.

# உத்தரபிரதேசத்தில் கொட்டும் மழையால் 15 பேர் உயிரிழப்பு!



லக்னோ,ஜூலை14

உத்தர பிரதேசத்தில் தொடர் மழையால் 15 பேர் உயிரிழந்து உள்ளனர்.

உத்தர பிரதேசத்தில் கடந்த 9 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை 3 நாள்களாக இடியுடன் கூடிய கனமழை பெய்து வருகிறது. இதனால் உன்னாவ், அம்பேத்கர் நகர், பிரயாக்ராஜ், பராபங்கி, ஹர்தோய், கிரி, கோரக்பூர், கான்பூர் நகர், பிலிபித், சோனபத்ரா, சந்தோலி, பிரோசாபாத், மாவ் மற்றும் சுல்தான்பூர் ஆகிய 14 மாவட்டங்களில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

தொடர் மழையால் 15 பேர் உயிரிழந்தனர். பல விலங்குகள் பலியாகின. 133 கட்டடங்கள் இடிந்து விழுந்துள்ளன என அதிகாரபூர்வ தகவல் தெரிவிக்கின்றது. நேற்று முதல் தொடர்ந்து 6 நாள்களுக்கு லக்னோவில் மழை பெய்ய கூடும் என இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது.

## டோனி அரசியலுக்கு?



கிரிக்கெட் வீரர் டோனி ஓய்வுக்குப்பின்பாரதீயஜனதாவில் சேரலாம் என பாரதீய ஜனதா தலைவர் சஞ்சை பஸ்வான் கூறினார்.

ஜார்க்கண்ட் மாநிலம் ராஞ்சியை சேர்ந்தவர் எம்.எஸ். டோனி. ஓய்வுக்கு பிறகு டோனி அரசியலில் ஈடுபடலாம் எனக் கூறப்படுகிறது. அவர் பாரதீய ஜனதாவில் சேரலாம் என்றும் கூறப்படுகிறது. ஆனால் அதுகுறித்த உறுதியான தகவல்கள் இல்லை. கடந்த ஜூலை 7 ஆம் திகதியுடன் டோனிக்கு 38 வயது ஆகிறது.

## உலக வங்கியின் நிர்வாக இயக்குநராக இந்தியப் பெண்மணி



உலக வங்கியின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை நிதி அதிகாரியாக இந்தியாவைச் சேர்ந்த பிரபல வங்கித் துறைநிபுணரும்ஸ்டேட்பாங்க் ஒவ் இந்தியாவின் தலைமை நிதி அதிகாரியுமான அன்சுலா காந்த் நியமிக்கப்பட்டுள்ளார். உலக வங்கியின் தலைமை நிதி அதிகாரி பொறுப்புக்கு நியமிக்கப்படும் முதல் பெண் இவர் ஆவார்.

உலக நாடுகளின் வளர்ச்சித் திட்டங்களுக்கு கடனுதவி அளிக்கும் உலக வங்கி அமெரிக்காவின் வொஷிங்டன் நகரில் இயங்கி வருகிறது.

இரண்டாவது உலகப்போர் முடிவடையும்போது தொடங்கப்பட்ட உலக வங்கியில், அதன் தலைவர்கள் அனைவரும் அமெரிக்கர்களாகவே இருந்து வருகின்றனர். உலக வங்கியில் அமெரிக்கா மிகப் பெரிய பங்குதாரராக விளங்குகிறது. இந்த வங்கியின் மூத்த நிர்வாகிகளாக பெரும்பாலும் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்தவர்களே நியமிக்கப்படுகின்றனர்.

# வான் எல்லையை இந்தியாவுக்கு திறந்து விட பாக். நிபந்தனை!

இஸ்லாமாபாத்,ஜூலை14

'இந்தியா தனது விமானப்படைத் தளங்களில் பாகிஸ்தானை அச்சுறுத்தும் வகையில் தயார் நிலையில் வைத்துள்ள போர் விமானங்களை அகற்றாத வரை, அந்நாட்டுக்கு, எங்கள் வான் எல்லை திறக்கப் படமாட்டாது' எனப் பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

ஜம்மு – காஷ்மீர் மாநிலம், புல்வாமாவில் பெப்ரவரி 14 ஆம் திகதி, பாகிஸ்தான் ஆதரவு பெற்ற, ஜெய்ஷ் – இ – முகமது தீவிரவாதி நடத்திய தற்கொலைப் படைத் தாக்குதலில், சி.ஆர்.பி.எவ். எனப்படும் மத்திய ரிசேர்வ் பொலிஸ் படையைச் சேர்ந்த, 40 வீரர்கள் இறந்தனர். இந்தத் தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில், பாகிஸ்தானின் பாலகோட் பகுதியில் இருந்த ஜெய்ஷ் – இ – முகமது தீவிரவாத அமைப்பின் முகாம்களை இந்திய விமானப்படையைச் சேர்ந்த விமானங்கள், பெப்ரவரி 26இல் குண்டுகள் வீசி அழித்தன.

இதையடுத்து, பாகிஸ்தான் வான் பகுதியில் இந்திய விமானங்கள் பறக்க பாகிஸ்தான் தடை விதித்தது. அதேபோல பாகிஸ்தான் விமானங்கள் இந்தியப் பகுதியில் பறக்க, இந்தியாவும் தடை விதித்தது. கடந்த மே மாதம் கிர்கிஸ்தானில் நடந்த, 'பிஸ்கெக்' மாநாட்டில் கலந்து கொள்வதற்குத் தங்கள் நாட்டு வான் பகுதி வழியாகச் செல்ல, பிரதமர் மோடிக்கு பாகிஸ்தான் அனுமதி வழங்கியது. ஆனால் பிரதமர் மோடி, பாகிஸ்தான் வான் வழியாக விமானத்தில் செல்வதை தவிர்த்து விட்டார்.

இந்நிலையில், இந்த விவகாரம் குறித்து பாகிஸ்தான் விமானப் போக்குவரத்துத் துறை செயலர் ஷாருக் நுஸ்ரத் அந்த நாட்டின் நாடாளுமன்ற நிலைக்குழுவிடம் கூறியவை வருமாறு:–

இந்தியாவின் விமானப்படை தளங்களில், பாகிஸ்தானை நோக்கி, போர் விமானங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. இந்த விமானங்களை, இந்தியா அகற்றாதவரை, அந்நாட்டுக்கு, நம் வான் பகுதியை திறப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை.

பாக்., வான்பகுதியை திறந்து விடுமாறு, இந்திய தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது. பாகிஸ்தானின் நிலை, இந்தியாவிடம் உறுதிபடத் தெரிவிக்கப்பட்டது. பாகிஸ்தான் விமானங்கள், இந்திய வான்பகுதியில் பறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுவதில் உண்மையில்லை. இந்திய வான்பகுதி திறக்கப்படாததால், தாய்லாந்துக்கும், மலேஷியாவுக்கும், பாகிஸ்தான் விமானங்கள் செல்வது இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது. – இவ்வாறு அவர் கூறினார்.





'பாகிஸ்தான் வான்பகுதி திறக்கப்படாத நிலையில், விமானங்கள் மாற்றுப் பாதையில் பறப்பதால், 'ஏர் இந்தியா' நிறுவனத்துக்கு, 430 கோடி ரூபா கூடுதலாக செலவாகியுள்ளது' என விமானப் போக்குவரத்து அமைச்சர் ஹர்தீப் சிங் பூ நாடாளுமன்றத்தில் வியாழனன்று தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# 36,000 அடி உயரத்தில் திடீரெனப் பயங்கரமாக குலுங்கிய விமானம்!

## பதற்றத்துக்கு மத்தியில் 37 பயணிகளுக்குக் காயம்

**ஒட்டாவா,ஜூலை14**
**அமெரிக்காவில் 36 ஆயிரம் அடி உயரத்தில் பறந்தபோது நடுவானில் விமானம் திடீரெனப் பயங்கரமாகக் குலுங்கியதால் பதற்றம் ஏற்பட்டது. 37 பயணிகள் காயம் அடைந்தனர்.**
**கனடாவின் வான்கூவர் நகரில் இருந்து ஆஸ்திரேலியாவின் சிட்னி நகருக்கு 'ஏர்கனடா' நிறுவனத்துக்கு சொந்தமான 'போயிங் 777-200' ரக விமானம் ஒன்று வியாழனன்று புறப்பட்டுச் சென்றது. விமானத்தில் 269 பயணிகளும், 15 ஊழியர்களும் இருந்தனர்.**



சுமார் 2 மணி நேரத்துக்கு பிறகு அமெரிக்காவின் ஹவாய் தீவுக்கு மேலே, 36 ஆயிரம் அடி உயரத்தில் அந்த விமானம் பறந்துகொண்டிருந்தது.

அப்போது சற்றும் எதிர்பாராத வகையில் நடுவானில் விமானம் பயங்கரமாக குலுங்கியது. விமானம் பயங்கரமாக குலுங்கி, ஆட்டம் கண்டதால் பயணிகள் மத்தியில் என்னவோ, ஏதோ என பெரும் பதற்றமும், பீதியும் உருவானது.

அனைவரும் பயத்தில் அலறினர். தவித்தனர். பயணிகள் சிலர் 'சீட் பெல்ட்' அணியாமல் இருந்ததால் அவர்கள் முன் இருக்கைகள் மீதும், மேற்கூரையிலும் மோதி காயம் அடைந்தனர்.

இதற்கிடையில் விமானத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து, சீராக இயக்க விமானி முயற்சித்தார். ஆனால் விமானம் தொடர்ந்து, குலுங்கியபடி இருந்ததால் விமானத்தை அவசரமாக தரையிறக்க முடிவு செய்தார்.

இதையடுத்து அவர் ஹவாயின் ஹோனாலுலு நகரில் உள்ள சர்வதேச விமான நிலையத்தின் கட்டுப்பாட்டு அறையை தொடர்புகொண்டு நிலைமையை எடுத்துக்கூறி விமானத்தை அவசரமாக அங்கு தரையிறக்க அனுமதி கேட்டார்.

அதற்கு அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து, அங்கு விமானம் பத்திரமாக தரையிறக்கப்பட்டது. உடனடியாக விமான ஊழியர்கள், பயணிகள் அனைவரையும் பத்திரமாக வெளியேற்றினர்.

முன்னதாக நடுவானில் விமானம் குலுங்கியதில் 37 பயணிகள் காயமடைந்தனர். அவர்களில் 9 பேருக்கு பலத்த காயங்கள் ஏற்பட்டன எனத் தெரிகிறது.

அவர்கள் அனைவரும் ஹோனாலுலு நகரில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விமானி சாதுர்யமாக செயல்பட்டு, விமானத்தை அவசரமாக தரையிறக்கியதால் பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டு, பயணிகள் அனைவரும் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர். அவர்களுக்கு வேறு விமானம் ஏற்பாடு செய்யும் வரை தங்குவதற்கு உள்ளூர் ஹோட்டலில் வசதி செய்துதரப்பட்டது.

விமானம் நடுவானில் குலுங்கியது ஏன் என்பது உடனடியாக தெரியவில்லை. இது குறித்து விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டு உள்ளது.

# ஓடுபாதையில் இருந்து விமானம் விலகி ஓடி விபத்துக்குள்ளானது!

## நேபாள விமான நிலையம் தற்காலிகமாக மூடல்



காத்மாண்டு,ஜூலை14

ஓடுபாதையில் இருந்து விமானம் விலகி விபத்துக்குள்ளானமையால் நேபாள விமான நிலையம் மூடப்பட்டது.

நேபாள நாட்டில் விமானப் போக்குவரத்து, மோசமான நிலையில் இருக்கிறது. அந்நாட்டின் விமானங்களிலும், விமான நிலையங்களிலும் பாதுகாப்பு அம்சங்கள் முறையாகக் கடைப் பிடிக்கப்படாதமையே இதற்குக் காரணமாகக் கூறப்படுகிறது.



இதனால் நேபாள நாட்டின் விமானங்கள் தங்கள் வான்பரப்பில் நுழைய ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகள் தடைவிதித்துள்ளன.

இந்த நிலையில் அந்நாட்டில் உள்ள ஒரே ஒரு சர்வதேச விமான நிலையமான காத்மாண்டு திரிபுவன் விமான நிலையத்துக்கு, நேற்று முன்தினம் காலை 66 பயணிகளுடன் உள்ளூர் விமானம் ஒன்று வந்தது. விமான நிலையத்தில் தரையிறங்கியபோது, ஓடுபாதையில் சறுக்கிய விமானம் 15 மீற்றர் தூரம் சென்று, புல்வெளி பகுதியில் பாய்ந்தது.

இந்தச் சம்பவத்தில் விமானத்தில் இருந்த பயணிகள் இருவருக்குக் காயம் ஏற்பட்டது. அவர்கள் உடனடியாக மீட்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இந்த விபத்துக் காரணமாக விமான நிலையத்தில் மற்ற விமானங்கள் புறப்பட்டு செல்வது மற்றும் தரையிறங்குவதில் சிக்கல் எழுந்தது. இதையடுத்து, காத்மாண்டு சர்வதேச விமான நிலையம் உடனடியாக மூடப்பட்டது.

தொடர்ந்து மழை பெய்த்தால் அப்பகுதியில் ஏற்பட்ட சேறு மற்றும் சகதி காரணமாக விமானத்தை ஓடுபாதைக்கு மீள இழுத்து வரும் பணி சுமார் 11மணி நேரத்துக்கு மேல் இழுபட்டதாகக் கூறப்பட்டது.

# ரஷ்ய ஏவுகணை தடுப்பு அமைப்பு அமெ. எதிர்ப்பை மீறி துருக்கிக்கு!



ரஷ்ய தயாரிப்பான எஸ் 400 ஏவுகணை தடுப்பு அமைப்பு, துருக்கியை வந்தடைந்திருக்கிறது.

பொருளாதாரத் தடை விதிக்கப்படும் என்ற அமெரிக்காவின் எச்சரிக்கையையும் மீறி, ரஷ்யாவிடமிருந்து, எஸ்–400 ஏவுகணை தடுப்பு அமைப்பை துருக்கி வாங்கியிருக்கிறது.

ரஷ்யாவின் எஸ்–400 ஏவுகணை தடுப்பு அமைப்பை வாங்குவதற்கு, துருக்கி ஒப்பந்தம் மேற்கொண்டதால் அந் நாட்டின் மீது, பொருளாதாரத் தடைவிதிக்கப்படும் என அமெரிக்கா, தொடர்ந்து எச்சரிக்கை விடுத்தும் வருகிறது.

அமெரிக்காவின் அதிருப்தியை புறந்தள்ளிய துருக்கி அதிபர் எர்டோகன்(Erdogan), தங்களை தற்காத்துக் கொள்ளத் தேவையான ஆயுதங்களை கொள்முதல் செய்வதாகவும், இதனால், வேறு யாரும் ஆத்திரப்படத் தேவையில்லை எனவும் கூறியிருக்கிறார்.

இந்நிலையில், ரஷ்யாவின் எஸ்–400 ஏவுகணை தடுப்பு அமைப்பு, அந்நாட்டிலிருந்து, துருக்கி தலைநகர் அங்காராவிற்கு அருகில் உள்ள விமானப்படை தளத்தை வந்தடைந்திருக்கிறது. இந்த தகவலை, துருக்கி பாதுகாப்புத்துறை அமைச்சகம் உறுதி செய்திருக்கிறது.

### தைவானுக்கு ஆயுதம் வழங்குவதா?

# நெருப்புடன் விளையாட வேண்டாம் அமெரிக்காவுக்கு சீனா எச்சரிக்கை

தைவானுக்கு ஆயுதம் வழங்க உள்ளதாக அறிவித்த அமெரிக்காவுக்கு நெருப்புடன் விளையாட வேண்டாம் என சீனா எச்சரிக்கை விடுத்துள்ளது.

அரசுமுறை பயணமாக ஹங்கேரி சென்றுள்ள சீனாவின் முக்கிய தூதர் வாங்யி (Wang Yi), அங்கு நடைபெற்ற மாநாடு ஒன்றில் பங்கேற்றார்.

அப்போது பேசிய அவர், சீனா மற்றும் தைவான் ஆகியவற்றின் ஒருங்கிணைவை எந்த சக்தியாலும் தடுக்க முடியாது எனவும், இந்த விவகாரத்தில் தலையிடயாரும் முயற்சிக்க வேண்டாம் எனவும் கூறினார்.

தைவானுக்கு எம்1ஏ2ரி (M1A2T) ஆப்ராம்ஸ் டாங்கிகள், ஸ்டிங்கர் ஏவுகணைகள் மற்றும் அதுதொடர்பான கருவிகளை, இந்திய மதிப்பில் சுமார் 15 ஆயிரம் கோடி ரூபாய்க்கு விற்பனை செய்ய அமெரிக்க வெளியுறவுத்துறை முடிவு செய்துள்ளதாக, பெண்டகன் திங்கட்கிழமையன்று அறிவித்திருந்தது.



இந்நிலையில்தான் சீனாவின் முக்கியத்தூதர் நெருப்புடன் விளையாட வேண்டாம் என எச்சரித்ததன் மூலம் அமெரிக்கா மீதான கோபத்தை, வெளிப் படுத்தியுள்ளார்.

சீனாவிலிருந்து பிரிந்து சென்றாலும் தைவான், சீனாவின் ஓர் அங்கம் எனவும், அதனை சீனாவுடன் இணைப்பதே குறிக்கோள் எனவும் சீன அரசு கூறி வருகிறது.

# தமிழர்களுக்குச் சம்பந்தன் துரோகம் இழைக்கின்றார்!

## செஹான் சேமசிங்க குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 14
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களுக்கு துரோகமிழைக்கின்றது என மஹிந்த ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.
கொழும்பில் நேற்று முன் தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்– தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு அரசு இதுவரை எவ்விததீர்வையும்பெற்றுக்கொடுக்க வில்லை என்று குற்றஞ்சாட்டும் கூட்டமைப்பினர் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சியைப் பாதுகாப்பதால் எவ்வித பயனும் ஏற்படாது.

வடக்கு–கிழக்குப் பிரதேசங்களில் உள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கம் கூட்டமைப்பினரிடம் கிடையாது. எதிர்க்கட்சியினர் என்று குறிப்பிட்டுக் கொண்டு கடந்த நான்கு வருட காலமாக அரசின் அனைத்து வரப்பிரசாதங்களையும் இவர்கள் பெற்று தமிழ் மக்களுக்குத் துரோகமிழைத்துள்ளார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு கூட்டமைப்பினரும், மக்கள் விடுதலை முன்னணியினரும் தொடர்ந்து ஆதரவு வழங்குவது அவர்களின் தனிப்பட்ட தீர்மானமாகும். எதிர்க்கட்சியினர் என்று குறிப்பிட்டுக் கொள்வதால் பதவி நிலையின் பொறுப்புக்கள் அவமதிக்கப்படுகின்றன.

ஆகவே இவ்விரு தரப்பினரும் குறுகிய காலத்திற்கு அரசின் அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக் கொண்டு முழுமையாக அரசுக்குச் சார்பாகவே செயற்படலாம். அதுவே சிறப்பாக அமையும்–என்றார். (ஐ)

# எரிகாயங்களுடன் மீட்கப்பட்ட தம்பதியர் வைத்தியசாலையில்

வவுனியா, ஜூலை 14
வவுனியா பொதுமண்டப வீதி 1ம் ஒழுங்கையில் அமைந்துள்ள வீடு ஒன்றில் இருந்து தீக்காயங்களுடன் மீட்கப்பட்ட கணவன், மனைவி ஆகியோர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வீட்டில் கதறல் சத்தம் கேட்டதையடுத்து அயலவர்கள் வீட்டுக்குள் சென்ற போது, வீடு முழுவதும் மண்ணெண்ணெய் ஊற்றப்பட்டிருந்தது. இருவரும் தீப்பற்றிய நிலையில் காணப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# 50 ரூபாவுக்காக கையெழுத்து

உறுதியளித்தவாறு பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 50 ரூபா கொடுப்பனவைப் பெற்றுக்கொடுக்குமாறு வலியுறுத்தி ஜே.வி.பியின் தொழிற்சங்கப் பிரிவான அகில இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கம் நேற்று முன் தினம் கையெழுத்து வேட்டையில் இறங்கியது. நேற்று முன் தினம் முற்பகல் ஹற்றன் நகர மத்தியில், தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையிலேயே கையெழுத்துகள் திரட்டப்பட்டன.

தோட்டத் தொழிலாளர்களுக்கு 50ரூபாவினை வழங்குவதாக கூறிய அரசாங்கம் இதுவரை 50 சதத்தைக் கூட வழங்கவில்லை. எனவே, தொழிலாளர்களின் கோரிக்கையை நிறைவேற்றாத அரசை வீட்டுக்கு அனுப்புவதற்கு தோட்ட தொழிலாளர்கள் முன்வரவேண்டும் என்றும் இதன்போது வலியுறுத்தப்பட்டது. (ஐ)

# ஆறு வயது மகனுடன் காணாமற்போன தாய்!

யாழ்ப்பாணம், ஜூலை 14
அச்சுவேலி தெற்கு பகுதியைச் சேர்ந்த தாயையும் மகனையும், கடந்த 9 ஆம் திகதி முதல் காணவில்லை எனப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

தம்பையா மகேந்திரன் என்பவருடைய மனைவியும், அவரது மகனுமே காணாமற்போயுள்ளனர் எனப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

காணாமற்போன தாய் 40 வயதுடைய ஜெயவர்தன் உமையாலோகனா என்றும், அவரது மகன் 6 வயதுடைய ஜெயவர்தன் ஜோகலவன் என்றும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (ஐ)

# தெரிவுக் குழு முன்பாக சாட்சியமளிக்கத் தயார்

## பிரதமர் ரணில் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 14
பயங்கரவாதத் தாக்குதல் குறித்து விசாரணை செய்யும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் சாட்சியமளிக்கத் தயார் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த நாடாளுமன்றத் தெரிவுக் குழு சட்ட ரீதியானதென நீதிமன்றமே ஏற்றுக்கொண்டுள்ள நிலையில், அதற்கு முன்னால் முன்னிலையாகிச் சாட்சியமளிக்கத் தான் தயாரெனப் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விசேட நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் முன்னிலையாகிச் சாட்சியமளிப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பயங்கரவாதத் தாக்குதல் இடம்பெற்றபோது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாட்டில் இல்லாத காரணத்தால், பிரதமர் அரசுக்குத் தலைமை தாங்கினார் என்பதன் அடிப்படையில் அவரை தெரிவுக்குழுவுக்கு அழைக்கத் தீர்மானிக்கப்பட்டதாக முன்னர் அறிவிக்கப்பட்டது.

கடந்த பெப்ரவரி மாதத்துக்குப் பின்னர் பாதுகாப்புச் சபையைக் கூட்டுவதில் காணப்பட்ட பிரச்சினைகள் மற்றும் அதில் பங்கேற்பதில் இருந்த நெருக்கடிகள் குறித்து பிரதமர் இதன்போது சாட்சியமளிப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ)

# பிணைமுறி மோசடி போன்று இனிமேல் இடம்பெறமாட்டாது

## யாழ்ப்பாணத்தில் கூறினார் மத்திய வங்கி ஆளுநர்

(எஸ்.நிதர்ஷன்)
யாழ்ப்பாணம், ஜூலை 14
பிணைமுறி மோசடி போன்று இனிமேல் இடம்பெறாதுஎனமத்தியவங்கியின் ஆளுநர் இந்திரஜித் குமாரசாமி தெரிவித்துள்ளார்.

வடக்கில் நிதிக் கம்பனிகள் மற்றும் குத்தகைக் கம்பனிகளை முகாமை செய்வதில் பல பிரச்சினைகள் இருக்கின்றன என்றும், இந்தக் கம்பனிகளால் ஏற்படும் பாதிப்புக்களில் இருந்த பொது மக்கள் விலகிக் கொள்ளவேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கும் மத்திய வங்கி ஆளுநருக்கும் இடையிலான சந்திப்பொன்று யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் நேற்று முன் தினம் மாலை இடம்பெற்றது.

இதன்போது இடம்பெற்ற கலந்துரையாடலில் பிணை முறி மோசடிக்கான காரணம் என்ன? அதற்கான தீர்வு காணப்பட்டதா என மாணவர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே ஆளுநர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்– சவால்கள் நிறைந்த காலத்திலேயே நான் பதவிக்கு வந்தேன். அத்தகைய பல்வேறு சவால்களையும் தாண்டி அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றேன். தொழில்முறைரீதியாக நேர்மையாகச் செயற்படுவதற்காக இறுக்கமான முறையில் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றோம்.

குறிப்பாக நான் இந்தப் பதவிக்கு வந்த காலத்தில் பிணை முறி மோசடிகள் தொடர்பாகப் பேசப்பட்ட காலத்தில் பல சவால்களும் காணப்பட்டன. அந்தப் பிணைமுறி தொடர்பாக இங்கு கேள்வி எழுப்பப்பட்டிருக்கின்றது.

அதில் புதிய ஏல முறைகள், வெளிப்படைச் சந்தை விளம்பரம், ஏலத்திற்கு முன்னரான கூட்டங்கள் என்பன தொடர்பிலே பேசப்படுகிறது. ஆகையால் அந்தப் பிணை முறி மோசடி போன்று இனிமேல் இடம்பெறாது. அதற்கான வழிமுறைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

வடக்கைப் பொறுத்தவரை நிதிக் கம்பனிகள் மற்றும் குத்தகைக் கம்பனிகளை முகாமை அல்லது மேற்பார்வை செய்வதில் பிரச்சினைகள் இருக்கின்றன. இவ்வாறு நிதிக் கம்பனிகள் தொடர்பில் பல பிரச்சினைகள் வடக்கில் இருக்கின்றன. அரசியல் பயன்படுத்தப்படுகிறது. ஆகவே நிதி நிறுவனங்கள் தொடர்பில் பொதுமக்கள் அறிந்து வைத்திருக்கவேண்டியது அவசியம்.

ஆகவே இங்கிருக்கின்ற மாணவர் சமூகம் நிதி தொடர்பில் அறிவு கொண்டவர்களாக உருவாகவேண்டும். அப்போது தான் இத்தகைய பல பாதிப்புக்களிலிருந்து விடுபட முடியும். அத்தோடு நான் பதவிக்கு வந்த சில வருடங்களில் பல சவால்கள் நிறைந்திருந்தாலும் அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டமையால் இந்தச் சவால்களை வெற்றிக்கொண்டு பயணிக்க முடிந்தது–என்றார்.

northern PC Park



கணினி உலகில் நம்பகமான சேவையில் 10 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

வடக்கின் கணினிப் பூங்கா
# 10, Muddaskada Junction
Stanly Road, Jaffna

தரமான கணினிகளைப் பெற்றுக் கொள்ள நம்மை நாடுங்கள்

www.pcpark.co
info.pcpark.co

Northern Pc Park 0777570124 0215675566
NPcpark 0773366443 0212229581
northernpcpark 0766999597 0212222050
Northern Pc Park 0717772377 0212220388

# மிக ஆபத்தான 'செல்பி' மோகம்!



ஒரு காலத்தில் படம் எடுத்தால் ஆயுள் குறையும் என்று தவிர்த்த காலம் போய் இன்று பிறவி எடுத்ததே 'செல்பி' எடுப்பதற்குத் தான் என்று என்னும் அளவிற்கு இந்தக் காலம் மாறியுள்ளது.

காலை முதல் இரவு படுக்கைக்குச் செல்லும் வரை படம் எடுத்து செல்பி எனும் (தாமியாக) பதிவிட்டு 'லைக்'கிற்காக ஏங்கிக் காத்திருக்கிறது இன்றைய இளைஞர்கள் கூட்டம்.

செல்போன் பயன்பாடு நல்லது செய்கிறதா மனிதனுக்கு கெடுதல் செய்கிறதா என்று சமூக வெளியில் பட்டிமன்றம் நடத்திக் கொண்டிருக்கும் அளவிற்கு இன்று செல்போன் நம்மிடையே வாழ்வில் கலந்துபோன விஷயமாக அமைந்துள்ளது. அது தினமும் பல தகவல்களை உலக அளவில் அள்ளிக் கொண்டு வந்து வழங்கி வருகிறது.

ஆரம்பத்தில் தகவல் தொடர்பிற்காக செல்போனை மருந்து போல பயன்படுத்தி வந்த மனிதன் இன்று அது மனிதனை அடிமைப்படுத்தும் மதுவின் போதை போல அமைந்துள்ளது. தாமி எனப்படும் செல்பி பட மோகம் மக்கள் மத்தியில் பெரிதும் வளர்ந்து வந்து கொண்டு இருக்கிறது. பிரபலங்கள் முன் படம் எடுப்பது, ரயில் முன் படம் எடுப்பது, ஆளைக் கொல்லும் கொடிய மிருகங்கள் அருகே சென்று படம் எடுப்பது என்பது தொடங்கி அதிகாலை வோக்கிங் செல்பி, உடற்பயிற்சி நேரத்தில் செல்பி, குளியலறை செல்பி, உணவு நேர செல்பி, படுக்கை அறை செல்பிகள் என்று செய்யும் செயல் ஒவ்வொன்றினையும் குறித்து எடுக்கப்படும் செல்பிகள் மோகம் வளர்ந்து கொண்டே செல்கிறது.

இதுவரை இன்ஸ்டாகிராமில் மட்டும் 9 கோடிக்கு மேற்பட்ட படங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டு லைக் மற்றும் கமெண்ட்ஸ் பெறப்பட்டுள்ளன. இது நமக்கு செல்பி மீது இருக்கும் மோகத்தையும் அதன் காரணமாய் ஏற்படும் ஆபத்தை அலட்சியப்படுத்தும் போக்கினையும் உணர்த்துவதாய் உள்ளது.



நடை, உடை, பேச்சு அணிகலன்களில் நாகரிகம் வந்தது போல தற்போது ஆபத்தான செல்பி எடுத்துப் பதிவிடுவதும் நாகரிகப்போக்காய் வளர்ந்துள்ளது. இது ஒருபுறம் இருக்க ஒரு படத்தினை எடுத்து அதனை பதிவேற்றம் செய்து மற்றவரின் லைக்கைப் பெறுவது என்பது தன்னம்பிக்கை மற்றும் சுய கௌரவத்தை கொடுப்பதாக மனரீதியாக நம்பப்படுகிறது. பொதுவாக செல்பி படத்தினைப் பதிவிடுவோரின் கூற்று தனது இருப்பை பதிவு செய்தலும் மற்றும் வெளிகாட்டலுமே செல்பியின் பணி என்று தொடங்கியது. இன்று வாழ்வில் தவிர்க்க இயலாத நடைமுறையாக ஆகியுள்ளது.

வளரும் செல்பி மோகத்தின் ஆபத்தினை உணர்ந்த அரசாங்கம் சில பகுதியில் செல்பி எடுக்கத்தடை விதித்து உள்ளது. தமிழக கோவில் கோபுரங்கள், ரயில் நிலைய இருப்புப்பாதைகள், விமான ஓடு பாதைகள், அணைக்கட்டுப் பகுதிகள், அனல்மின் நிலையப்பகுதிகள், தேசிய நெடுஞ்சாலைத் திருப்பங்கள் போன்ற ஆபத்தான பகுதிகளில் செல்பி எனும் தாமி எடுப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மும்பையில் 15 இடங்களில் செல்பி படங்கள் எடுப்பதற்கு அரசு தடை விதித்துள்ளது, இதுமட்டுமின்றி தற்போதைய மத்திய உள்துறை அமைச்சகம் சார்பில் அந்தந்த மாநில அரசிற்கு இது போன்ற ஆபத்தான இடங்களில் எச்சரிக்கைப் பலகை வைப்பதற்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## உயிரை அநியாயமாக பலிகொடுக்கும் இன்றைய இளசுகளின் தீவிர போக்கு!!

டிக் டாக், ஷேர்சாட்டில் காலை முதல் இரவு படுக்கைக்குச் செல்லும் வரையிலான ஒவ்வொரு செயலினையும் படத்துடன் பதிவேற்றம் செய்து பின்னணியாக திரைப் படத்தின் பாடலையும், வசனத்தையும் பதிவு செய்து லைக்கிற்காக ஏங்கிக் காத்து நிற்கிறது இன்றைய இளைஞர்கள் கூட்டம். இதுமட்டுமல்லாது லைக்கிடைக்க வில்லையே என்ற ஏக்கத்தின் விலைவாக தன் விலைமதிப்பில்லாத தனது உயிரையும் மாய்த்துக் கொள்கின்ற பரிதாப நிலையும் இன்று பல இடங்களில் அரங்கேறுகிறது.

திரிலிங்கான படத்தைப் போட்டு அதிக லைக்குகளைப் பெற வேண்டும் என்ற நோக்கில் எடுக்கும் முயற்சிகள் பல ஆபத்தில் போய் முடிகின்றன. ஆபத்தான செல்பி படம் பதிவேற்ற மோகத்தின் விளைவாக இந்திய அளவில் இது வரை 259 க்கும் மேற்பட்டோர் மரணமடைந்து இருக்கின்றனர் என காவல்துறைக் கணக்கெடுப்பு கூறுகிறது.

ஒரு காலத்தில் பொழுதுபோக்கு என்பது தமது வேலை நேரம் போக எஞ்சி இருக்கும் நேரம் மட்டுமே ஆகும். ஆனால் இன்றைய நாகரிகச் சூழலில் முழு நேரமும் பொழுது போக்கிற்காக ஒதுக்கப் படுகிறது. தனது வாழ்க்கை நகர்வினைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் இன்றைய இளம் வயதினர் கையில் ஒரு செல்போனுடன் பெரும் பொழுதினைக் கழிப்பது வேதனைக்கு உரியதாக உள்ளது. சினிமா பாடலுக்கு ஆடுவது, சினிமா வசனங்களுக்கு நடிப்பது, பிறரின் கவனத்தை ஈர்க்க வேண்டி ஆடைகளின் அளவினைக் குறைத்துப் பதிவிட்டுக் கலாசாரச் சீரழிவினை ஏற்படுத்தும் போக்கும் இன்று பரவலாக காணப்படுகிறது.

லைக் என்னும் விருப்பத்தினைப் பெரும்பொருட்டு லைப் என்னும் வாழ்க்கையை துச்சமாக என்னும் போக்கு வளர்ந்த வண்ணம் உள்ளது. ஒரு காலத்தில் தன்னையும் தன் அதீத செயலையும் காட்டிடும் வகையில் தலைகீழாக நடப்பது, தண்ணீரில் மிதப்பது, மரத்தின் உச்சியில் இருந்து குதிப்பது என்று சாகசம் செய்வது போய் இன்று வலைத்தள மோகத்தின் விளைவால் அழகான உயிரையும், வாழ்க்கையும் பெரிதாக எண்ணாமல் எடுக்கும் செல்பிகள் பெரும் ஆபத்தில் கொண்டு போய் விடுகிறது. இதனால் குடும்பமே பெரும் துன்பத் திற்கு ஆளாக வேண்டிய பரிதாப நிலை ஏற்படுகிறது.

அடுத்தவர் விருப்பத்தினை பெருவதற்காக எடுக்கப்படும் படங்கள் ஒருபுறம் இருந்தாலும் நாகரிகம், பண்பாடு ஆகியவற்றை கேலியாக்கும் வகையில் எடுக்கப்படும் பதிவுகள் ஏற்படுத்தும் விளைவுகள் பெரும் சமூக ஆபத்தினை ஏற்படுத்துகின்றன. லைக்கினை பெறுவதற்காக தமது வீரத்தை வெளிப்படுத்துகிறோம் என எண்ணிக் கொண்டு சமூக அமைதிக்கு ஆபத்தான செயல்களைப் பதிவிட்டு பின் சிறைத் தண்டனைக்கு உள்ளாகும் பரிதாப நிலையும் ஏற்படுகிறது,

ஒரு காலத்தில் படம் எடுத்தால் ஆயுசு குறையும் என்று தவிர்த்த காலம் போய் இன்று பிறவி எடுத்ததே செல்பி எடுப்பதற்குத் தான் என்று என்னும் அளவிற்கு இந்தக் காலம் மாறியுள்ளது.

அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாகும் என்னும் முதுமொழிக்கு ஏற்ப செல்போனில் செல்பிகளை அளவுடன் பதிவிட்டு மகிழ்வோம். லைக்கை விட லைப்பே உயர்வானது என்பதை உணர்வோம். அறிவியல் நல்ல சேவகன். ஆனால் கெட்ட எஜமானன் என்பதை அனைவரும் உணர்ந்து செயல்படுவோம்.

“
**இன்றைய நாகரிகச் சூழலில் முழு நேரமும் பொழுது போக்கிற்காக ஒதுக்கப் படுகிறது. தனது வாழ்க்கை நகர்வினைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் இன்றைய இளம் வயதினர் கையில் ஒரு செல்போனுடன் பெரும் பொழுதினைக் கழிப்பது வேதனைக்கு உரியதாக உள்ளது. சினிமா பாடலுக்கு ஆடுவது, சினிமா வசனங்களுக்கு நடிப்பது, பிறரின் கவனத்தை ஈர்க்க வேண்டி ஆடைகளின் அளவினைக் குறைத்துப் பதிவிட்டுக் கலாசாரச் சீரழிவினை ஏற்படுத்தும் போக்கும் இன்று பரவலாக காணப்படுகிறது.**



# இறுதிச் சடங்கிலுள்ள காரண, காரியங்கள்



பிணங்களை ஏன் சூரியன் மறைவதற்குள் எரித்துவிட வேண்டும் என்று கூறுகிறார்கள் தெரியுமா?

இறுதிச் சடங்குகள் என்பது இந்தியாவில் அனைத்து மதங்களிலும் நடத்தப்படும் ஒன்றாகும். ஆனால் மற்ற மதங்களுடன் ஒப்பிடுகையில் இந்து மதத்தில் அதிகளவு வித்தியாசமான இறுதிச் சடங்குகள் நடத்தப்படுகின்றன. ஆனால் இந்த ஒவ்வொரு சடங்கிற்கு பின்னரும் ஒரு காரணத்தை நம் முன்னோர்கள் வைத்துள்ளனர்.

இறந்தவர்கள் மரணத்திற்கு பிறகு அமைதியான வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில்தான் அனைத்து இறுதிச்சடங்குகளும் நடத்தப்படுகின்றன. ஆனால் பல இறுதி சடங்குகள் ஏன் செய்யப்படுகின்றன என்பதே நமக்கு தெரியாது. இந்த பதிவில் அனைத்து இறுதிச் சடங்குகளுக்கும் பின்னால் இருக்கும் காரணங்களை பார்க்கலாம்.

### மூக்கில் பஞ்சு வைப்பது



இறந்தவர்களின் உடல் என்பது பாக்டீரியாக்கள் அதிகம் வசிக்கும் இடமாக மாறிவிடும். எனவே அவர்களின் உடலில் இருந்து நுண்ணுயிர்கள் மூலம் சில வாயுக்கள் வெளிவரும். இதனால் சுற்றுச்சூழல் பாதிக் கப்படும். இதனை தடுக்கத்தான் நாடிகட்டு என்னும் பெயரில் காதையும், வாயையும் சேர்த்து கட்டுகிறார்கள். மேலும் மூக்கில் பஞ்சு வைக்கப்பட காரணமும் நுண்ணுயிர்கள் உடலில் பரவாமல் இருக்கத்தான்.

### விளக்கேற்றுவது

இறந்தவர்கள் வீட்டில் கண்டிப்பாக விளக்கேற்றி வைக்க வேண்டும் என்பது முக்கியமான சடங்காகும். உயிர் சக்தியானது உடலை விட்டு பிரிந்து விட்டால் உடலானது வெற்றுடலாக மாறிவிடும். அவர்கள் உடலில் இருந்து வாயுக்கள் வெளியேற தொடங்கிவிடும். ஆன்மீக ரீதியாக அவர்கள் உயிர் அலைகள் அந்த இடத்திலேயே சுற்றிவரும். இந்த அலைகள் மற்றவர்கள் உடலில் நுழைந்தால் அவர்கள் பல துன்பங்களுக்கு ஆளாக நேரிடும். இதனை தடுக்கவே விளக் கேற்றி வைக்கப்படுகிறது. இந்த விளக்கு தெற்கு திசை நோக்கி ஏற்றிவைக்கப்பட வேண்டும், ஏனெனில் இதுதான் மரணத்தின் கடவுளான எமனுக்கான திசையாகும். விளக்கேற்றி வைத்தபின் எமதர்மரிடம் அந்த அலைகள் தன்னை நெருங்காமல் விளக்கின் தீபத்திற்கு செல்லும்படி வேண்டிக்கொள்ள வேண்டும்.

### ஒரு திரி மட்டும் உபயோகிக்க வேண்டும்

ஒருவர் இறந்த பிறகு பஞ்ச பூதங்களால் நிறைந்த அவரின் உடலானது உயிரற்றதாகிவிடும். அதன்பின் ஒரே ஆன்மா மட்டுமே ஒளிரும். விளக்குகளில் பயன்படுத்தப்படும் ஒற்றை திரியானது ஒளிரும் ஆன்மாவை குறிக்கும்.

ஏன் பகலில் மட்டுமே செய்யப்படுகிறது? அனைத்து இறுதிச் சடங்குகளும் பகல் நேரத்தில் மட்டுமே செய்ய வேண்டும், ஏனெனில் உடலை தகனம் செய்வது முதன்மையான தாகும். ஏனெனில் இரவு என்பது எதிர்மறை சக்திகள் அதிகம் உலவும் மேலும் அவற்றின் பலமும் இரவு நேரங்களில் அதிகம் இருக்கும். இறந்த எதிர்மறை சக்திகள்



எப்பொழுதும் மற்ற உடல்களில் நுழைய முயலும். எதிர்மறை சக்திகளின் இந்த தாக்குதல்களை தவிர்க்கவே உடல் பகல் பொழுதில் தகனம் செய்யப்படுகிறது. அறிவியல்ரீதியாக கூறும்போது இறந்தவர்களின் உடலில் இருந்து வெளிப்படும் நுண்ணுயிர்களின் அளவு அதிகமாக இருக்கும். இது சுற்றி இருப்பவர்களுக்கு எளிதில் தாக்கக்கூடும். அதனால்தான் உடல் தகனம் பகலில் செய்யப்படுகிறது.

### மூங்கில் பாடை

மூங்கில்களில் குறிப்பிட்ட ஒலி ஆற்றலை வெளியிடும் தன்மை உள்ளது, இது சுற்றி வரும் தன்மையுடையது. இதில் இருந்து வெளிப்படும் ஒலி ஆற்றல் இறந்து உடலுக்கு கவசமாக அலைகளை ஏற்படுத்தக்கூடும். மூங்கிலால் செய்யப்பட்ட பாடையில் இருக்கும் போது அந்த உடல் ஒலி ஆற்றலால் எதிர்மறை சக்திகளிடம் இருந்து பாதுகாக்கப்படும்.

### கால்கள் சேர்த்து கட்டப்படுவது

இறந்தவர்களின் உடல் தகனம் செய்யப்படுவதற்கு முன்பு அவர்கள் உடல் தரையில்



வைக்கப்பட்டு அந்த உடலின் காலின் பெருவிரல் இரண்டும் சேர்த்து கட்டப்படும். இது உடலின் வலது மற்றும் இடதுபுற ஆற்றல்கள் இரண்டையும் ஒன்று சேர்த்து உடலையே சுற்றி வர காலின் விரல்கள் கட்டப்படுகின்றன.

### மண்பானை

இறந்த உடலைச் சுற்றி இருக்கும் ஆற்றலை ஒருமுகப்படுத்த பல பொருள்கள் பயன்படுத்தப்படுகின்றன, அதில் ஒன்றுதான் மண்பானை. மண்ணால் செய்யப்பட்ட பொருள்கள் இந்த வேலையை சிறப்பாக செய்கின்றன. உடலை எதிர்மறை சக்திகளின் தாக்குதல்களில் இருந்து பாதுகாக்க மண்பானை உதவுகிறது. மண்பானையிலிருந்து வெளிப்படும் ஒலி ஆற்றல்கள் மிகவும் வேகமாக பரவக்கூடியவை. **நன்றி - இணையம்**

# காதல் தோல்வியா?

## தூக்கிப் போட்டு விட்டு வாருங்கள் வெளியே!

காதல் வாழ்க்கையில் நம்மைக் கடந்து போகிற ஒரு நிகழ்வு என்பதை புரிந்து கொண்டால் அதன் சோகத்திலிருந்து விரைவில் வெளியேறிவிட முடியும்.

கல்வி, வேலை என்பது போல காதலும் வாழ்க்கையில் நம்மைக் கடந்து போகிற ஒரு நிகழ்வு தான் என்பதை முதலில் புரிந்து கொள்ளுங்கள். அது வெற்றியை நோக்கிப் பயணித்தால் திருமணத்திலும் நம்மைச் சுற்றியுள்ள சூழல் இடம் கொடுக்காமல் போனால் தோல்வியிலும் முடிகிறது என்ற எளிய உண்மையைப் புரிந்து கொண்டாலே போதும். அந்த சோகத்திலிருந்து மிக விரைவில் வெளியேறிவிட முடியும்.



வழக்கமாக உங்களுக்கு பிடித்ததை விட உங்களுடைய காதலருக்கு பிடித்தது போலத்தான் அதிகமாக ஆடைகள் அணிந்திருப்பீர்கள். நடை பாவனை இருந்திருக்கும். ஆனால் அதையெல்லாம் விட்டுவிட்டு முதலில் உங்களுக்கு எது பிடிக்குமோ அதை செய்யுங்கள். உங்களுக்குப் பிடித்த மாதிரி ஆடைகளை அணியுங்கள். புதிய ஹேர் ஸ்டைல் ஒன்றை மாற்றிக் கொள்ளுங்கள். உங்கள் வெளிப்புறத் தோற்றத்தில் நீங்கள் செய்யும் சின்னச் சின்ன மாற்றங்கள் கூட உங்கள் மனதை உற்சாகமாக மாற்றிவிடும்.

நடந்து முடிந்த பழைய விஷயங்களைத் தோண்டி ஆராய்வதில் எந்த பயனும் இல்லை என்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும். கொஞ்சமும் யோசிக்காமல் உங்கள் முன்னால் காதலனை நீங்கள் பயன்படுத்தும் வாட்ஸ்அப், ஃபேஸ்புக், டுவிட்டர் போன்ற சோசியல்



மீடியாக்களில் உங்கள் நட்பு வட்டத்திலிருந்து பிளாக் செய்து விடுங்கள். சமூக ஊடகங்களில் அவர்களுடன் தொடர்பில் இருக்கின்றமையால், நம் வாழ்க்கையை பற்றி அவர்களுக்கு தெரிவித்துக் கொண்டே இருக்கிறோம். அவர்கள் என்ன செய்கிறார்கள், எப்படி இருக்கிறார்கள், எதை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்கிறோம். அவர்களை சார்ந்து வாழாமல் நீங்கள் தனியாக சுதந்திரமாக உணர்வதற்கு, அவர்களுடன் இருக்கும் சமூக ஊடகத் தொடர்புகளை உடனடியாக நீக்க வேண்டும்.

காதலித்தபோது கிடைத்த பரிசுப் பொருள்க ளைத் தூக்கியெறிவது தான் நல்லது. அதை பெட்டிக்குள் போட்டு அடைத்து வைத்துக் கொண்டு அவ்வப்போது எடுத்துப் பார்ப்பதெல்லாம் வீண். அது சிலருக்கு தன்னை குற்றவாளியாகவும் தன்னுடைய இயலாமையையும் அல்லது தான் காதலித்த நபர் மீது கோபத்தையும் வன்மத்தையும் மட்டுமே அதிகரிக்கச் செய்யும். அதற்கு உங்கள் மனம் இடம் கொடுக்கவில்லையெனில், நீங்கள் அந்த மனநிலையிலிருந்து வெளியேறி பக்குவமடையும் வரையில், உங்கள் நம்பிக்கைக்குரிய யாரிடமாவது கொடுத்து வைத்திருங்கள்.

நீங்கள் சந்தோஷமாக இருப்பது போல் பாசாங்கு காட்ட வேண்டாம். கோபம், சோகம், வருத்தம் போன்ற உணர்ச்சிகளை முதலில் நீங்கள் அதையதை அப்படியே வெளிக்காட்டக் கற்றுக் கொள்ளுங்கள். இதன் மூலம் அந்த உணர்ச்சிகளில் இருந்து எளிதில் வெளிவர முடியும். வருந்துவதும் ஒரு விதத்தில் நல்ல விடயம் தான். அதனால் அந்த ஆறாப்புண் விரைவில் குணமடையும்.

இதுவரையிலும் காதலனுடன் மட்டுமே வெளி யில் சென்று, நண்பர்களையெல்லாம் மறந்து ஒரு சிறிய வட்டத்துக்குள் வாழ்ந்திருப்பீர்கள். அதனால் மீண்டும் நண்பர்களைத் தேடிப் போங்கள். இதுவரை வாழ்ந்த ஒரு சிறிய பாதுகாப்பு வட்டத்தை விட்டு வெளியே வாருங்கள். இதுவரை செய்யத் தயங்கிய சில விடயங்களை முயற்சித்துப் பாருங்கள்.

# மூடநம்பிக்கை என்ற பெயரில் இழைக்கப்படும் கொடுமைகள் என்னென்ன தெரியுமா?

உலகம் முழுவதும் மூடநம்பிக்கைகள் என்பது இருந்து கொண்டுதான் இருக்கின்றன. ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு வகையான மூடநம்பிக்கைகள். ஆனால் மற்ற நாடுகளுடன் ஒப்பிடும்போது இன்றும் அதிக மூடநம்பிக்கைகள் இருக்கின்றன.

எண்ணிலடங்கா மூடநம்பிக்கைகள் இருக்கின்றன. அவற்றில் சில மூடநம்பிக்கைகள் சிரிப்பையும் சில மூடநம்பிக்கைகள் எரிச்சலூட்டுவது போலவும் இருக்கிறது. அதிலும் இந்த மூடநம்பிக்கைகளால் அதிகம் பாதிக்கப்படுபவர்கள் பெண்கள் தான்.



### பெயர் சொல்லி அழைக்கக்கூடாது

ஒருவர் வீட்டை விட்டு வெளியே செல்லும்போது அவர்களின் பெயரை சத்தம் போட்டு அழைத்தால் அவர்களுக்கு துரதிர்ஷ்டம் வந்துவிடுமென்று கூறுகிறார்கள். இதுமட்டுமின்றி வெளியே செல்லும்போது எங்கே செல்கிறாய் என்று கேட்டால் போகிற காரியம் கெட்டுவிடும் என்னும் நம்பிக்கையும் இந்தியாவில் உள்ளது.

### தும்மல்




இந்தியாவில் மூடநம்பிக்கைகளுக்கு அளவே இல்லை. தும்மலில் கூட சகுனம் பார்ப்பார்கள். தும்மல் வரும்போது கூட இரட்டைப்படையில்தான் தும்ம வேண்டும். ஒற்றைப் படையில் தும்மினால் ஏதோ கெட்டது நடக்கப்போகிறது என்று நினைத்து பயப்படுவார்கள்.

### உடைந்த கண்ணாடி



உங்கள் வீட்டில் கண்ணாடியோ அல்லது கண்ணாடியால் செய்யப்பட்டோ பொருளோ உடைந்துவிட்டால் அதனை உடனடியாக சுத்தம் செய்ய வேண்டும் என்று கூறுவார்கள். அதனை அப்படியே அல்லது அதன் பாகத்தை வீட்டில் வைத்திருந்தால் வீட்டில் சண்டை வரும் என்று ஒரு விநோதமான நம்பிக்கை நிலவுகிறது.

### ஏணிக்கு கீழே நடப்பது



ஏணிக்கு கீழே நடப்பது ஆபத்தானதுதான் ஏனெனில் அது நம் தலையில் விழ வாய்ப்புள்ளது. ஆனால் அதற்கு இந்தியாவில் கூறப்படும் மூடநம்பிக்கை யாதெனில் சுவரில் சாய்த்து வைக்கப்பட்டிருக்கும் ஏணி முக்கோண வடிவத்தை தரும். இதற்கு கீழ் நடந்தால் உங்களை பேய் பிடித்து கொள்ளுமாம்.

### காலையில் பார்க்கும் முகம்

காலையில் முதலில் பார்க்கும் முகத்தில் இருக்கும் மூடநம்பிக்கை பலரிடமும் இருக்கிறது. நாள் முழுவதுமான வேலை காலையில் பார்க்கும் முகத்தில்தான் இருக்கிறது என்று நினைத்துக் கொள்கிறார்கள். அன்று அவர்களுக்கு நடக்கும் நல்லது மற்றும் கெட்டதிற்கு காலையில் பார்ப்பவரின் முகத்தின் மீது எளிதாக பழிபோட்டு விடுகிறார்கள்.



### மாதவிடாய் காலம்



இது இந்தியா முழுவதும் இருக்கும் மூடநம்பிக் கையின் உச்சம் ஆகும். அதாவது மற்ற நாள்களில் லட்சுமியாக கூறப்படும் பெண் மாதவிடாய் காலத்தில் மட்டும் அசுத்தமானவர்களாக கருதப்படுகிறார்கள். இந்த நாள்களில் சுப காரியங்களில் பெண்கள் பங்கேறக் கூடாது. சமையலறையில் நுழையக் கூடாது, சமைக்கக்கூடாது. இந்த நாள்களில் பெண்களுக்கு ஓய்வு அவசியம் அதற்காக அவர்கள் வேலை செய்ய வேண்டாம் என்று கூறுவது நியா யம், ஆனால் அவர்கள் தீண்டினால் உணவுகள் அசுத்தமாகிவிடும் என்று கூறுவதெல்லாம் மூடத்தனத்தின் உச்சம் என்றே கூறவேண்டும்.

### கர்ப்பிணி பெண்கள்



கர்ப்பிணி பெண்கள் இரவு நேரத்தில் தனியாக நடக்கக் கூடாது அதேபோல காலியான வீட்டுக்குள் நுழையக்கூடாது. அவ்வாறு செய்தால் பெண்களை பேய் பிடித்துக் கொள்ளும் என்ற மூடநம்பிக்கை உள்ளது.

### விதவைகள்

இந்தியாவில் நிலவும் மிகவும் மடத்தனமான மூடநம்பிக்கைகளில் இதுவும் ஒன்றாகும். பெண்களை நசுக்கும் நம்பிக்கைகளில் இதுவும் ஒன்றாகும், விதவை பெண்களை துரதிர்ஷ்டத்தின் உருவமாக அடையாளப்படுத்துவது என்பது மிகப்பெரிய முட்டாள்தனமாகும். ஆனால் பல நூற்றாண்டுகளாக இந்த நம்பிக்கை இருந்து வருகிறது.



### இரவில் விசிலடிப்பது

பாம்பை கண்டால் பயமா? அப்படியெனில் இரவில் விசில் அடிக்கக்கூடாது, ஏனெனில் பாம்பு அந்த சத்தத்தை கேட்டு உங்கள் வீட்டுக்கு வந்து விடும். இதுவும் இன்றும் இருக்கும் மூடநம்பிக்கை ஆனால் பாம்புக்கு காது இல்லை என்பது அனைவரும் அறிந்ததே.



### வீட்டிற்குள் குடை விரிப்பது

குடை உங்களை பலவற்றில் இருந்து பாதுகாக்கும் ஒன்றாகும். அதனை வீட்டிற்குள் விரிப்பது உங்களை பாதுகாக்கும் கடவுளை அவமதிக்கும் செயலாகும். எனவே வீட்டுக்குள் குடையை விரிக்கக் கூடாது. சிரிக்காதீர்கள் இது பரவலாக இன்றும் இருக்கும் நம்பிக்கையாகும்.



### வீட்டை கூட்டுவது

மாலை நேரத்தில் வீட்டை கூட்டும் பழக்கம் எந்த வீட்டிலும் இருக்காது, ஏனெனில் அவ்வாறு செய்தால் வீட்டில் இருக்கும் லக்ஷ்மி போய் விடுமாம். உண்மையில் மின்சாரம் இல்லாத காலகட்டத்தில் சூரியன் மறைந்த பிறகு வீட்டை கூட்டும்போது விலை மதிப்பான பொருள் கீழ் கிடந்தால் அத்தனையும் சேர்த்து கூட்டித்தள்ளிவிடுவார்கள் என்பதற்காக இந்த நம்பிக்கை ஏற்படுத்தப்பட்டது. ஆனால் இப்பொழுதும் அதனைத் தொடர்வது வேடிக்கையானது.





# காட்டு நாய்களின் அராஜகம்...!

இமயமலைத் தொடர்களில் வாழும் அறிய உயிரினம் பனிச்சிறுத்தை. நேரில் பார்ப்பதே அரிதென்பதால் இவற்றை 'Ghosts of the Mountains' என்றுதான் பலரும் அழைப்பர். ஆறு கிலோமீற்றர் உயரம் வரை உள்ள இடங்களில் வாழும் இவற்றுக்கு, தற்போது புது எதிரி ஒன்று உருவாகியிருக்கிறது.

ஏற்கெனவே நம்மால் ஏற்பட்டிருக்கும் காலநிலை மாற்றத்தில் பெரும் சிக்கலைச் சந்தித்துவருகின்றன இந்த பனிச்சிறுத்தைகள். பனி இருக்கும் பிரதேசங்கள் மலைகளின் உச்சியை நோக்கி குறைந்து கொண்டே வருகின்றன.

இதனால், தாவரவாழ்க்கை பாதிக்கப்பட்டு, இவற்றின் இரைகளும் குறைந்துகொண்டே வருகின்றன. இதனால், அருகில் இருக்கும் கிராமங்களுக்குள் புகுந்து கால்நடைகளை வேட்டையாடுவதால், எதிர்வினையாக இவை அந்தக் கிராம மக்களாலும் கொல்லப்படுகின்றன. ஆனால், இவற்றைவிடவும் பனிச்சிறுத்தையின் வாழ்வுக்கு பெரும் இடையூறாக உருவெடுத்திருப்பது காட்டு நாய்கள் தான்.

தற்போது, ஜம்மு காஷ்மீரின் லே மாவட்டத்தில் மட்டும் 3 ஆயிரத்துக்கும் மேல் காட்டுநாய்கள் இருக்கின்றன. முறைப்படுத்தப்படாத சுற்றுலா வசதிகள், அதிகமான குப்பை உருவாதல் போன்ற விடயங்கள்தான் இவற்றின் திடீர் வளர்ச்சிக்கு முக்கி



யக் காரணமாகப் பார்க்கப்படுகிறது. பனிச்சிறுத்தைகளுக்கு இவை ஏற்படுத்தும் அச்சுறுத்தலை சமீபத்தில் படம்பிடித்திருந்தார் நரேந்திர பாட்டீல் என்னும் இயற்கை ஆர்வலர். அந்தப் படங்கள், பெரும் விவாதத்தைக் கிளப்பியிருக்கின்றன.

பனிச்சிறுத்தை மட்டுமல்லாமல், 80இற்கும் அதிகமான விலங்கினங்கள் காட்டு நாய்களால் இமயமலையில் பாதிக்கப்பட்டுள்ளன.

மூன்று கிலோமீற்றர் உயரத்தில் எடுக்கப்பட்ட இந்தப் படங்களில் பனிச்சிறுத்தை வேட்டையாடிய இரையை சுற்றிப்பிடிக்க முயற்சி செய்கின்றன காட்டுநாய்கள். இந்தக் கூட்டத்துடன் வெகுநேரமாகப் போராடுகிறது. முடிவைப் பார்க்க முடியவில்லை என்றாலும் நடந்ததை வைத்து, இறுதியாக இதில் வேட்டைநாய்களே வென்றிருக்க வேண்டும் என்கிறார், பாட்டீல்.

பனிச்சிறுத்தைக்கே இந்த நிலை என்றால் மற்ற விலங்குகளின் நிலை என்ன? 80 இற்கும் அதிகமான விலங்கினங்கள் இதனால் அங்குப் பாதிக்கப் பட்டுள்ளன. காட்டுநாய்களின் திடீர் எழுச்சி அங்கு மொத்த சமநிலையையுமே சீர்குலைத்துவருகிறது. இந்த நாய்களைக் கட்டுப்படுத்த வேண்டியது அவசியம் என்கின்றனர் இயற்கை ஆர்வலர்கள்.

### கர்தினால்கள் ஆலோசனை குழுவின் 30வது கூட்டம்

வத்திக்கானின் பல்வேறு துறைகளில் பரிந்து ரைக்கப்பட்டுள்ள மாற்றங்களை மையப்படுத்தி உருவாக்கப்பட்டுள்ள ஒரு முன்வரைவு ஏட்டினை கர்தினால்கள் குழுவின் 30 ஆவது கூட்டம் ஆழமாகப் பரிசீலனை செய்தது. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்கு உரு வாக்கப்பட்ட கர்தினால்கள் குழுவின் 30 வது கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தைக் குறித்து, வத்திக்கான் செய்தித்துறை தலைவர் அலெஸாந்த்ரோ ஜிசோத்தி அவர்கள், செய்தியாளர்களிடம் விவரங்களை வழங்கினார்.

காலைக்கதிர் Kalaikathir
கிறிஸ்தவ செய்தி இதழ் TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

### ஒவ்வொரு நாளும்; கூட்டங்களில் திருத்தந்தையும் கலந்துகொண்டார்

ஒவ்வொரு நாளும் நடைபெற்ற இக்கூட்டங் களில் திருத்தந்தையும் கலந்துகொண்டார் என்றும் புதன் மறைக்கல்வி உரை வழங்கிய வேளை மட்டும் அவர் பங்கேற்கவில்லை. பல்வேறு துறைகளில் பரிந்துரைக் கப்பட்டுள்ள மாற்றங்களை மையப் படுத்தி உருவாக் கப்பட்டுள்ள ஒரு முன்வரைவு ஏட்டினை கர்தினால்கள் குழு ஆழமாகப் பரிசீலனை செய்தது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கர்தினால்கள் குழுவின் 31வது அமர்வு செப்ரெம்பர் மாதம் நடைபெறும் என்று ஜிசோத்தி அவர்கள் செய்தியாளர்களிடம் அறிவித்தார்.

யாழ். மன்னார், திருமலை, மட்டக்களப்பு மறை மாவட்டங்கள் இணைந்து

# தனிநாயகம் அடிகளாரின் பெயரில் பல்கலைக்கழகம் அமைக்க வேண்டும்

## தமிழாராய்ச்சி மாநாட்டில் ரூபன் மரியாம்பிள்ளை வேண்டுகோள்

10 ஆவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு அமெரிக்கா சிக்காகோ மாநகரில் 04 ஜுலை முதல் 07 ஜுலை வரை நடைபெற்ற போது தனிநாயகம் அடிகளாரின் பத்திரிகைப்பணி வழி தமிழ்ப்பணி என்னும் தலைப்பிலான ஆய்வுக் கட்டுரையை 07 யூலை 2019 அன்று சமர்ப்பித்த போதே மேற்கண்ட அழைப்பை விடுத்தார்.

15ஆம் வயதில் புனித பத்திரிசியார் கல்லூரியின் பொட்டில் சண்சைன் என்ற ஆங்கில மாத இதழில் ஆசிரியப்பணி புரிந்த அனுபவம் - கிறிஸ்தவ மிசனறிமார் தம் சமயப்பணிக்கு பத்திரிகைத் துறையை ஓர் ஊடக மாகப் பயன்படுத்தி வெற்றி கண்டனர் என்ற அறிவு - தமிழ் மொழியின் சிறப்பை ஆங்கில மொழியில் வெளியிட்டால்தான் வெளிநாட்டவர் தமிழ் மொழியின் சிறப்பை அறிந்து கொள்வர் என்ற தெளிவு என்பவற்றை பின்புலமாக வைத்து -

தமிழ் கல்ச்சர் (1952) மற்றும் ஜேணல் ஒப் தமிழ் ஸ்ரடீஸ் (1968) என்ற இரண்டு ஆங்கில இதழ்களை வெளியிட்டு அதன் வழி 1966இல் மலேசியாவில் முதல் உலக தமிழாராய்ச்சி மாநாட்டையும் தொடர்ந்து முறையே 1968இல் சென்னை 1970இல் பரிஸ் 1974இல் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் நான்கு தமிழாராய்ச்சி மாநாடுகளை நடத்தி -

அதன் தொடராக 2019ஆம் ஆண்டு 10 ஆவது உலக தமிழாராய்ச்சி மாநாடு அமெரிக்காவின் சிக்காகோ மாநகரில் நடைபெற அடியிட்டவர் இலங்கை தமிழ் கத்தோலிக்க குருவானவர் தனிநாயகம் அடிகளார்.







# வேறு எந்த ஆயரும் அனுபவிக்காத கொடிய அனுபவத்தின் வழி பயணித்தவர் மேதகு கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை

மன்னார் மறைமாவட்டத்தின் முதலாவது ஆயராக 11 ஆண்டுகளும் (1981 - 1992) - யாழ் மறைமாவட்டத்தில் 23 ஆண்டுகளுமாக (1992 -2015) மொத்தமாக 34 வருடங்கள் (1981 - 2015) ஆயர்பணி புரிந்தவர் ஆயர் மேதகு கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை. அவரின் 38ஆவது ஆயர்த்துவ நிறைவு 2019 ஜுலை மாதம் நினைவு கூரப்பட்டது.


யாழ் மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையுடன் மேற்கொண்ட நேர் காணலை இங்கு தருகிறோம்.

மன்னார் மறைமாவட்டத்தில் மறக்க முடியாத சம்பவம் என்ன என்று கேட்டவுடன் மேரி பஸ்ரியன் அடிகளார் 1985 ஆம் ஆண்டு இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டமை அதிர்ச்சியான சோகம் நிறைந்த மறக்க முடியாத சம்பவம் - பின்னர் வேறு பல நிகழ்வுகள் நடைபெற்றாலும் இது அந்த வகையானவற்றில் முதலாவது என்கின்ற வகையில் மறக்க முடியாது.- என்றார்.

வேறு எந்த ஆயரும் அனுபவிக்காத கொடிய அனுபவத்தின் ஊடாக தம் பயணப்பாதையை அமைத்துள்ளார் என்ற யாழ் ஆயர் மேதகு கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தெரிவித்திருந்தார். அநேக குருக்களின் அகால இறப்புக்களைத் தனியாக நின்று தாங்கிக் கொண்டவர் ஆயர் மேதகு கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை.

1995 ஆம் ஆண்டு இடப் பெயர்வின் போது நடந்த அந்தச் சம்பவத்தை மறக்கமுடியாது. இடம்பெயாந்து மிரிசுவிலில் அமைக்கப்பட்ட தற்காலிக ஆயர் இல்லத்தில் ஆயர் தங்கி இருந்தார். காலை 11 மணி இருக்கும். அவரின் முன்னால் இருந்து பேசிக் கொண்டிருந்தேன். போல் றோகான் அடிகளார் கதவைத்தட்டிவிட்டு உள்ளேவரும்படியான அழைப்பிற்குக் காத்திராமல் வேகமாக உள்ளே வந்தார். ஏதோ விபரீதம் நடந்துள்ளது என்பது மட்டும் தெளிவானது. வந்த வேகத்திலேயே ஒரு மிகவும் துக்கமான செய்தி.

ஆயர் என்ன என்று கேட்க நேரமே தராமல் லொறற் அடிகளார் நோயினால் இறந்து விட்டார் என்றார். மை கோட் என்றவர் பின்னர் எதுவுமே பேசவில்லை. அப்படியே அதிர்ந்து போனார். மயான அமைதி நிலவியது. அவர் உள்ளத்தை சோகம் இறுகப் பற்றிக் கொண்டது. அந்த அமைதியை குழப்பாமல் அப்படியே மெதுவாக எழுந்து சத்தம் இடாமல் வெளியே வருவதற்குக் கதவை நோக்கி நடந்தேன். போல் றோகான் அடிகளாரும் அப்படியே நகர்ந்தார். இறுகி அடைத்துப் போன குரலில் என்னை நோக்கி உம்மிடம்தான் சவேரியார் குருத்துவக் கல்லூரி வான் இருக்கிறது. அதில் தான்



லொறற் அடிகளாரின் உடம்பை ஏற்ற வேண்டும். பார்த்து உதவி செய்யும் என்றார்.

அப்போது பிறதராக இருந்த லியோ ஆம்ஸ்றோங் அடிகளார் லொறற் அடிகளாரைக் கதிரையில் இருப்பது போல் வான் பின் சீற்றில் இருத்தி தன்னோடு அணைத்து வைத்திருக்க சவேரியார் குருத்துவக் கல்லூரிக்குச் சொந்தமான வானில் ஏற்றி கொண்டுவந்தோம். மறுதினம் செம்பியன்பற்றிற்கும் அதே வானில் கொண்டு சென்றோம்.

அந்த சோகத்தின் உச்சக்கட்டமான நேரத்திலும் பதற்றமின்றி இறை சித்தத்தை ஏற்று எவ்வளவு வேகமாக சிந்தித்தார் செயற்பட்டார் என வியந்து போனேன்.

குருக்கள் ஒவ்வொருவரின் இறப்பும் ஓர் ஆயருக்குத் தம் குடும்பத்தில் ஒருவரைப் பறி கொடுத்த அனுபவத்தையே தரும். அதுவும் பலரை இள வயதில் அகாலமாகவே கொடுத்த வேதனையை அனுபவித்தவர். வங்காலை பங்கில் பணியாற்றிய யாழ் மறை மாவட்டத்தைச் சேர்ந்த எம்.மேரி பஸ்ரியன் அடிகளார் சுட்டுக்கொல்லப்பட்டமை (06 ஜனவரி 1985)- ஜி.யோண் லொறற் அடிகளாரின் திடீர் சுகவீன மரணம் (01 ஜனவரி 1996) - ரி.ஜிம்பிறவுண் அடிகளார் காணாமல் போனமை (20 ஓகஸ்ற் 2006) -

யாழ் மறை மாவட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்டு மன்னார் மறை மாவட்டத்தில் இணைந்து பணியாற்றிய எம்.பாக்கிய ரஞ்சித் அடிகளாரின் கிளேமோர் தாக்குதல் மரணம் (26 செப்ரெம்பர் 2007) - எம்.எக்ஸ்.கிளி கருணா ரட்ணம் அடிகளாரின் கண்ணி வெடித் தாக்குதல் மரணம் (12 ஏப்பிரல் 2008) - இறுதிப் போரில் எம்.ரி.சறத் ஜீவன் அடிகளாரின் அதிர்ச்சி மரணம் (18 மே 2009) - ஜி.ஏ.பிரான்சிஸ் யோசவ் அடிகளார் காணாமல் போனமை (18 மே 2009) - லக்ஸ்மன் அடிகளாரின் விபத்து மரணம் (14 நவம்பர் 2013) என்பன மறக்க முடியாத சோக நிகழ்வுகள் ஆகின.



# மாமியார்- மருமகள் சச்சரவு வருவது ஏன்?

திருமண பந்தங்களில் மிகவும் முதன்மையான உறவு ஒன்று மாமியார் மருமகள். சினிமாவில் எப்போது சண்டைகோழிகளாகவே காட்டப்பட்ட மாமியார் மருமகள் உண்மையிலும் அப்படித்தான் இருக்கிறார்களா? இருவருக்குள்ளும் நடைபெறும் மர்ம யுத்தங்களுக்கு யார் காரணம் என்பதை பார்க்கலாம்.

பையன் பிறந்துவிட்டால் சந்தோசப்படும் பெண்கள் மகனுக்கு திருமண வயது வந்துவிட்டால் பெரும் சோகமாகிவிடுகிறார்கள். காரணம், இதுவரை தன்னுடைய பலம் தன் வருங்காலத்தை பாதுகாக்கும் அரணாக நினைத்திருந்த மகனை உரிமை கொண்டாட வந்துவிடும் மருமகள். இது உரிமை போராட்டமாக அணுக வேண்டிய அவசியமே இல்லை.

இயற்கையான விஷயம் தான் இது என்பதை புரிந்து கொள்ளுங்கள். திருமண வயதில் மகன் கொடுக்கும் முன்னுரிமைகளை எல்லாம் பெரிது படுத்தி கவலைப் படாதீர்கள். உங்களுக்கான இடம் எப்போதுமே மகன் மனதில் இருக்கும். அந்த இடம் எப்போதும் மாறாது. மருமகள், கிட்டதட்ட 20 வருடங்கள் வாழ்ந்த சூழலை, வாழ்க்கையை விட்டுவிட்டு புதிய இடத்திற்கு வந்திருக்கிறாள். புதிய இடத்தை ஏற்றுக் கொள்வதற்கான கால அவகாசத்தை கொடுத்திடுங்கள்.

திருமணம் செய்து கொண்ட நாளின் முதலே பொறுப்புகளை தூக்கி மருமகள் தலையில் வைக்காதீர்கள். தட்டிக் கொடுங்கள், உரிமையாய் பழகுங்கள். இன்னொரு வீட்டுப் பெண், குறைந்த வரதட்சணை, சொத்து இல்லை என்ற சங்கதிகளை எல்லாம் மறந்துவிட்டு உங்களுக்கு மிகவும் பிடித்தமான மகனின் மனைவி என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

மருமகளைப் பற்றிய முன் அபிப்பிராயங்களை தவிர்த்திடுங்கள், குடும்ப வழக்கங்கள், நடைமுறைகள், பாரம்பரியமாக நீங்கள் கடைபிடித்து வரும் விடயங்கள் என்றால் முன்னரே மருமகளுடன் பகிர்ந்து கொள்ளுங்கள், கேட்கட்டும் என்று காத்திருந்து தவறிய பின்னர் கடிந்து கொள்ள வேண்டாம். எதிர்காலம் குறித்தும், வருமானம் குறித்தும் சதா சர்வ காலமும் பயந்து கொண்டே இல்லாமல் மகனுடன் இயைந்து வாழுங்கள். முயற்சித்துப் பாருங்கள் நிச்சயம் மாற்றம் தெரியும்.

உங்களின் கணவர் வீட்டினர் யாரும் எதிரிகள் கிடையாது. உங்களுக்கு கணவர் மீது எவ்வளவு அன்பு இருக்கிறதோ அதேயளவு அவரை இப்போதைய நிலைக்கு உயர்த்திய அவரது குடும்பத்தினர் மீதும் இருக்கட்டும். ஒரே நாளில் கணவர் வளர்ந்து விடவில்லை என்பதையும் உணருங்கள். திருமணம் ஆகிவிட்டால் கணவர் முழுவதும் தனக்கே சொந்தம் என்று குழந்தைகள் பொம்மைக்கு சண்டையிடுவது போல சிறுபிள்ளைத்தனமாக யோசிக்காதீர்கள். கணவரின் எண்ணங்களுக்கு, விருப்பங்களுக்கு முன்னுரிமை கொடுக்கட்டும். தனக்கு பிடித்தமான அம்மாவிடம் கோப்பி வாங்கி குடிப்பதாலோ அம்மாவுக்கு பிடித்த சேலை வாங்கிக் கொடுப்பதாலோ ஒன்றும் உங்களுக்கான அன்பு குறைந்திடாது.

வெவ்வேறு எல்லைகளில் நின்று கொண்டிருக்கும் பெண்களுக்கு நடுவே சிக்கியிருக்கும் ஆண், இச்சூழலை சமாளிப்பது ஒன்றும் பெரிய விஷத்தையல்ல. மாறி மாறி புகார்கள் வந்தால் உடனடியாக உணர்ச்சிவசப்பட்டு முடிவெடுக்காதீர்கள். உங்களுக்கான முன்னுரிமைகள் எது என்று தீர்க்கமாக முடிவெடுங்கள். முடிந்தவரையில் ஒளிவுமறைவுகளைத் தவிர்த்திடுங்கள். பொய்களை சொல்லி சிக்குவதை விட உண்மையைச் சொல்லி வரும் விவாதங்களை சந்தியுங்கள். மனைவி வந்துவிட்டால் அம்மாவின் இடம் குறைந்திடாது என்பதை புரிய வையுங்கள். நீங்கள் சமநிலையாக இருப்பது அவசியம். வாழ்க்கை வசப்படட்டும்! அன்பு வாழ்த்துக்கள்.... மாமியார் மருமகள் தீர்க்க முடியாத பிரச்சினையல்ல தீர்க்க மறுக்கிற பிரச்சினை தான்.

## பிரகாசமான சருமத்தைப் பெற ஃபேஸ் பேக்..!

மிகவும் எளிமையான இயற்கையில் கிடைக்கும் இரண்டு பொருள்களைக் கொண்டு வீட்டிலேயே ஃபேஸ் பேக் தயாரித்து, முகத்தில் தடவி வந்தால், அற்புதமான உடனடி பலனைக் காணலாம். முக்கியமாக இந்த ஃபேஸ் பேக்கிற்கு 10 நிமிடங் களே போதுமானது.

ஊட்டச்சத்துக்கள் அதிகம் நிறைந்த பாதாம் மற்றும் பால் இருந்தால் போதும். இந்த பாதாம் ஃபேஸ்பேக் சருமத்தில் உள்ள அழுக்குகளை நீக்குவதோடு, முகம் பொலிவோடும், பிரகாசமாகவும் இருக்கும். விரிவடைந்து அசிங்கமான காணப்படும் சருமத்



துளைகளை சுருங்கச் செய்யும்.

தேவையான பொருள்கள்

பாதாம் பவுடர் – 1 தேக்கரண்டி

பால் – 2 தேக்கரண்டி

செய்முறை

பாதாம் பவுடர் மற்றும் பால் சேர்த்து பேஸ்ட் செய்து கொள்ள வேண்டும். அந்த பொடியில் பால் சேர்த்து கலந்து கொள்ளுங்கள். பின்பு அந்த பேஸ்ட்டை முகம் மற்றும் கழுத்துப் பகுதியில் தடவி, குறைந்தது 10 நிமிடம் ஊற வைத்துக் கொள்ளுங்கள். இறுதியில் குளிர்ந்த நீரால் முகத்தைக் கழுவ வேண்டும். இப்படி இந்த மாஸ்க்கை தினமும் பயன்படுத்தி வந்தால், சருமத்தில் ஒரு நல்ல மாற்றத்தைக் காணலாம்.

சருமத்தில் உள்ள அழுக்குகள் நீங்குவதோடு சருமத்தில் உள்ள இறந்த செல்கள் நீங்கும். பிரகாசமான சருமத்தைப் பெற உதவும்.



## வாய் துர்நாற்றத்தை போக்கும் வழிகள்

உடனடியாக வாய் துர்நாற்றத்தைப் போக்க நறுமணப் பொருள்களை வாயில் இட்டு மெல்லலாம். தற்போது சூயிங்கம், mouth Freshnner ஆகியவற்றைப் பயன்படுத்தலாம்.

வாய் துர்நாற்றம் உள்ளவர்கள் வெற்றிலையை வாயில் அடக் குவது போல கிராம்பை மென்று வாயில் அடக்கிக்கொள்ளலாம்.

அரை லீற்றர் நீரில் புதினா சாறு (Mint juice), எலுமிச்சை சாறு (Lime juice) ஆகியவற்றைக் கலந்து வாய் கொப்பளிக்கலாம் இதனால் வாய் துர்நாற்றம் நீங்கும்.

வாய் துர்நாற்றத்தைப் போக்க எலுமிச்சை சாறுடன் நீர் கலந்து அதில் சிறிதளவு உப்புச் சேர்த்து குடித்து வரலாம். இந்தக் கலவையை வாயிலிட்டு கொப்புளிக்க வாய் துர்நாற்றம் நீங்கும்.

குடல்புண் பிரச்சினையால்தான் பெரும்பாலான வாய் துர்நாற்றம் ஏற்படுகிறது. இதைப் போக்க காலையில் எழுந்தவுடன் கோப்பியைத் தவிர்த்துவிட்டு 4 டம்ளர் தண்ணீரை வெறும் வயிற்றில் குடிக்கலாம். இதனால் வயிறு சுத்தப்படுவதோடு அல்சர் நீங்கி வாய் துர்நாற்றம் ஏற்படுவதும் தவிர்க்கப்படும்.

வேறு சில காரணங்களாலும் வாயில் துர்நாற்றம் ஏற்படும். நன்றாக துலக்கப்படாத பற்களின் இடுக்குளில் கிருமிகள் சேர்வதால் இந்த துர்நாற்றம் ஏற்படும். எனவே மருத்துவரிடம் ஆலோசனைப் பெற்று பற்களை சுத்தம் செய்துகொள்ளவதன் மூலம் துர்நாற்றத்தை தவிர்க்கலாம். அத்தோடு பற்களின் பாதுகாப்பும் பலப்படும்.

அதிக காரம், அதிக புளிப்பு உள்ள உணவு வகைகளை தவிர்ப்பதால் வாய் துர்நாற்றத்தைத் தவிர்க்கலாம்.

## வாரமொரு சமையல்

### வாழைப்பழம் அப்பம்

**தேவையான பொருள்கள்:**

கோதுமை மா – ஒரு கப் , வாழைப்பழம் – இரண்டு, முந்திரி துண்டு – இரண்டு தேக்கரண்டி, ஏலக்காய் தூள் – தேக்கரண்டி, சர்க்கரை – கால் கப் , சோடா மாவு – ஒரு சிட்டிகை, உப்பு – ஒரு சிட்டிகை



**செய்முறை**

ஒரு கிண்ணத்தில் கோதுமை மாவு, வாழைப் பழம் நன்கு குழைத்தது, முந்திரி துண்டுகள், ஏலக் காய் தூள், சர்க்கரை, சிறிதளவு தண்ணீர் ஊற்றி அப்பம் மாவு போல் கெட்டியாக பிசைந்து கொள்ளவும்.

பிறகு, பாத்திரத்தில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும் கரண்டியில் ஒவ்வொரு கரண்டியாக ஊற்றி வட்டமாக ஊற்றி பொன்னிறமாக பொரித்து எடுக்கவும். சுவையான இனிப்பு அப்பம் தயார்.

## கர்ப்பிணிகளுக்கு ஆபத்தை உண்டாக்கும் மாத்திரை

பெண்களுக்கு கர்ப்பக் காலங்களில் மருத்துவர் ஆலோசனைப்படி உட்கொள்ளும் மாத்திரைகளே ஆபத்தை விளைவிப்பதாக ஆய்வறிக்கையில் தெரியவந்துள்ளது. அதிலும் குறிப்பாக இரும்புச்சத்து குறைபாட்டுக்கு கொடுக்கப்படும் மாத்திரை ஆபத்தை தருகிறது என்கிறது ஆய்வு. 33 சதவீத கர்ப்பிணிகள் அனிமீயா என்னும் ரத்த சோகையால் பாதிக்கப்படுகின்றனர். கர்ப்பக் காலத்தில் பெண்களுக்கு இரும்புச்சத்து மிகவும் அவசியமாகும். ரத்தத்தில் உள்ள சிவப்பு அணுக்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதில் இரும்புச்சத்து முக்கிய பங்கு வகிக்கிறது.

பெண்களுக்கு ரத்த சிவப்பு அணுக்களின் எண்ணிக்கை குறையும் போது நோய் எதிர்ப்பு சக்தி குறைந்து கொண்டே போகும். இதனால் அடிக்கடி சோர்வுறுதல்,

மயக்கம், இடுப்பு மற்றும் கை, கால் வலி ஏற்படும். உடலில் ஏற்படும் சிறு வலியைக் கூட தாங்க முடியாத சூழ்நிலை உண்டாகும். இதைத் தடுப்பதற்காக இரும்புச்சத்து மாத்திரைகள் கர்ப்பிணிகளுக்கு கொடுக்கப்படுகின்றன. நாள் ஒன்றுக்கு 9 மில்லி கிராம் இரும்புச்சத்து சாதாரண பெண்களுக்குத் தேவைப்படும்.

இதுவே கர்ப்பிணியாக இருந்தால் நாளொன்றுக்கு 27 மில்லிகிராம் வரை இரும்புச்சத்து தேவைப்படுகிறது. இதனால் மாத்திரைகளை அதிக அளவு எடுத்துக் கொள்ளும் போது அது உடலில் நச்சுத் தன்மையாக மாறி உடலில் உள்ள வாயுவை அலர்ஜியுறச் செய்து பல தீங்குகளை உண்டாக்குகிறது. இதனால் மலச்சிக்கல், வாந்தி, வயிற்றுப் போக்கு, உடல் சோர்வு, தலைச்சுற்றல், மயக்கம் உண்டாகி கருவில் உள்ள குழந்தைக்கு தாக்கத்தை ஏற்படுத்தும் என்ற தகவல் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

# இந்தியக் கிரிக்கெட் அணியின் முக்கிய வீரர்கள் பலர் 'அவுட்'!



இந்தியக் கிரிக்கெட் அணியின் நடுத்தர துடுப்பாட்ட வரிசையை முழுமையாக சீரமைக்க, இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை திட்டமிட்டுள்ளது.

உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களின் பங்களிப்பே அதிகமாக இருந்ததாகவும், நடுத்தர வரிசை துடுப்பாட்ட வீரர்கள் தங்களது பங்களிப்பை வழங்கவில்லை எனவும் பல தரப்பாலும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

அத்தோடு, ரி-20 உலகக் கிண்ண கிரிக்கெட் வரவுள்ள நிலையில் அணியை தயார்படுத்துவதில் சுயபரிசோதனை செய்ய வேண்டும் என கோஹ்லி கூறியுள்ளார். இதனால் 20 வீரர்கள் கொண்ட தொகுப்பை உடனே ஏற்படுத்தவும், தற்போது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தியாவைத்தவிர வேறு இடங்களில் நடைபெறும் போட்டிகளில் நெருக்கடியான சூழலைக் கையாளா மல், இந்திய அணியின் மத்திய தரவரிசை வீரர்கள் திணறுகின்றனர்.

இதனை மெய்ப்பிக்கும் வகையில், உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரின் நியூஸிலாந்து அணிக்கெதிரான அரையிறுதிப் போட்டி அமைந்திருந்தது. இதனால், உலகக்கிண்ணத் தொடரில் சோபிக்காத வீரர்களை அணியிலிருந்து நீக்கிவிட்டு, உள்ளூர்ப் போட்டிகளில் சிறப்பாக விளையாடிய வீரர்களை உள்வாங்க இந்தி யக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை திட்டமிட்டுள்ளது.

அடுத்து இந்தியக் கிரிக்கெட் அணி, எதிர்கொள்ளும் பெரிய போட்டி தொடராக ரி-20 உலகக்கிண்ணம் அமையவுள்ளது. இதனால், எதிர்வரும் 2020ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள ரி-20 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடருக்கு ஏற்ற அணியாக தற்போது தயார் செய்யப்படும் அணி இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

மகேந்திர சிங் டோனி அணித் தலைவராக இருந்தபோதே, ஒருநாள் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடருக்கு 2 ஆண்டுகள், ரி-20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடருக்கு 18 மாதங்கள் முன்னதாகவே அணியை தயார்படுத்தும் கொள்கை கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

இறுதியாக கடந்த 2017ஆம் ஆண்டு சம்பியன்ஸ் கிண்ண தோல்விக்கு பின் இந்திய ஒருநாள் அணி கட்டமைக்கப்பட்டது. சுழற்பந்து வீச்சாளர்கள் குல்தீப், சஹால் ஆகியோர் சிறந்த சுழற்பந்து வீச்சாளராக உருவாகினர். இதன்பிறகு உலகக்கிண் ணத் தொடருக்கான அணி கட்டமைக்க பட்டபோதும், மத்திய தரவரிசை வீரர்கள் சொதப்பியது இந்திய அணியின் வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாக பார்க்கப்படுகின்றது.

எம்.எஸ்.கே. பிரசாத் தலைமையிலான தேர்வாளர் குழு இந்தியக் கிரிக்கெட் கட்டுப் பாட்டு சபை புதிய நிர்வாகிகள் தேர்வு செய் யப்படும் வரை பதவியில் நீடிக்கும் நிலை யில், அடுத்த 14 மாதங்களுக்கான அணியின் செயற் பாடுகளை வகுக்கும் எனத் தெரிகிறது. இவர்களின் அதிரடி நடவடிக்கையாக நிலை குலைந்து போயுள்ள நடுத்தர வரிசை துடுப்பாட்ட வீரர்களான கேதார் ஜாதவ், தினேஷ் கார்த்திக் ஆகியோர் அணியிலிருந்து நீக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இங்கிலாந்து சூழ்நிலைக்காக துடுப்பாட்ட வாய்ப்பு தினேஷ் கார்த்திக்குக்கு கிடைக்கவில்லை. விக்கெட் காப்பாளர் திறனுக்காக மட்டுமே அவர் அணியில் சேர்க்கப்பட்டார்.

காயமுற்று அவதிப்பட்டு வந்த கேதார் ஜாதவால் அதிரடியாக துடுப்பெடுத்தாட முடியவில்லை. டோனியின் அணுகுமுறை வெற்றி பெற, ஜடேஜா, பாண்ட்யா போன்றவர்கள் அவருடன் விளையாட வேண்டும். அவ்வாறு விளையாடினால் மட்டுமே அவர்களுக்கும் அணியில் வாய்ப்பு கிடைக்கும்.

இவர்களுக்கு பதிலாக அணியிலிருந்து புறக்கணிக் கப்பட்ட இளம் வீரர்களான மனிஷ் பாண்டே, ஷ்ரேயஸ் ஐயர் மற்றும் சுப்மன் கில் ஆகியோர் எதிர்வரும் போட்டிகளில் உள்வாங்கப்படலாம் என எதிர்பார்க்கப் படுகின்றது.

இதுதவிர மனிஷ் பாண்டே, ஷ்ரேயஸ் ஐயர், பிரித்வி ஷா, மயங்க் அகர்வால் ஆகியோர் அதிரடியாக துடுப்பெடுத்தாடக் கூடியவர்கள். ஆகையால் இவர்க ளுக்கும் அணியில் வாய்ப்புண்டு. பந்துவீச்சில் நவ்தீப் சைனி, கலீல் அகமது, தீபக் சஹார், சுழற்பந்தில் ராகுல் சஹார், மயங்க் மார்க்கண்டே, சகலதுறை வீரர் நிதிஷ் ரணா, சகலதுறை வீரர் க்ருணால் பாண்ட்யா, விக்கெட் காப்பாளர் சஞ்சய் சாம்சன் ஆகியோருக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படும் எனத் தெரிகிறது.

விராட் கோஹ்லி, ரோஹித் சர்மா, ஷிகர் தவான், விஜய் சங்கர், பும்ரா, ராகுல், ரிஷப் பந்த், குல்தீப் யாதவ், புவனேஷ்வர் குமார், மொஹமட் ஷமி ஆகி யோர் அணியின் முக்கியமான வீரர்களாக இருப்பர்.




## பார்சிலோனாவில் நடைபெறவுள்ள பயிற்சிக்கு 8 இளம் வீரர்கள் தெரிவு

ஸ்பெயினின் உதைபந்து கழகமான பார்சி லோனாவின் 2019 ஆண்டுக்கான உதைபந்துச் சிறப்புப் பயிற்சி முகாமில் கலந்து கொள்ளவதற் கான வாய்ப்பை இலங்கையைச் சேர்ந்த 08 இளம் வீரர்கள் பெற்றுள்ளனர்.

செப்ரெம்பர் மாதம் ஸ்பெயினில் நடைபெற வுள்ள பயிற்சி முகாமில் இவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். இவர்களில் 06 ஆண்களும் மற்றும் 02 பெண்களும் அடங்குகின்றனர்.

இந்த 08 பேரில் வடக்கைச் சேர்ந்த ஒரு வீரரும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

**தெரிவு செய்யப்பட்ட வீரர்கள்:**

01:- மொஹமட் ராஹில் (கொழும்பு ஸாஹிரா கல்லூரி)

02:- டேவிட் டாலிங்சன் (யாழ் புனித கென்றியரசர் கல்லூரி)

03:- சிதுக்க ஹன்னாதிகே (கொழும்பு சென்.ஜோசப் கல்லூரி)

04:- நடால் ஆரோன் (கொழும்பு கேட்வே கல்லூரி)

05:- றிஸ்வான் ஹீமைத் (மாவனெல்லை பதுரியா மத்திய கல்லூரி)

06:- எம்.எஸ்.எம் முமாஸ் (கம்பளை ஸாஹிரா கல்லூரி)

07:- சசித் நிம்சார (பொலனறுவை பெதிவெல மத்திய கல்லூரி)

08:- மல்கி லிஹாரா அதிகாரி - (மலியதேவ மகளிர் கல்லூரி)

# அருமையான வெற்றி



உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரின் ஆஸ்திரேலிய அணிக்கெதிரான அரையிறுதிப் போட்டியில் இங்கிலாந்து அணி 8 விக்கெட் டுகளால் அபார வெற்றிபெற்றது.

இந்த வெற்றியின் பின்னர் இங்கிலாந்து அணியின் தலைவர் இயன் மோர்கன் கூறிய கருத்துக்கள் இவை-

இந்த வெற்றி மிகவும் அருமையாகவும், நன்றாகவும் இருக்கிறது. இறுதியாக நடைபெற்ற மூன்று போட்டிகளில் எமது செயல்திறனை எடுத்துக் கொண்டால் நாங்கள் ஓர் அணியாக சிறப்பாக வந்துள்ளோம். நாங்கள் ஓர் அணி யாக, நன்றாக அனுபவிக்கக் கற்றுக் கொண் டோம்.

ஓர் அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிக்கு வந்து போட்டியாளர்களாக இருப்பதற்கு நாங் கள் ஓர் அணியாக விளையாட வேண்டும் என்று நாங்கள் போட்டிக்கு முன்பு பேசினோம். இன்று ஒரு படி முன் வந்துவிட்டோம் என்று நான் நினைக்கிறேன்.

மைதானத்தில் உள்ள அனைவரையும் போல உடைமாற்றும் அறையில் இருந்தவர் கள்கூட வீசப்பட்ட ஒவ்வொரு பந்தையும் நேசித்தார்கள்.

வீரர்களின் அர்ப்பணிப்புக்குக் குறைவு இருக்கவில்லை. குறிப்பாக பந்துவீச்சாளர்கள் சிறப்பாக செயற்பட்டமை அருமை. இது கடந்த நான்கு வருடங்களில் அவர்களின் முழுமை யான செயல்திறன் ஒன்றிற்கு நெருக்கமாக இருந்தது. எங்கள் திட்டங்களை இலகுவாக செயல்படுத்த முடிந்தது.

இது கடந்த நான்கு வருடங்களாக நாங்கள் முன்னெடுத்த ஒரு செயல்முறையாகும். நாங் கள் சிறந்த அணிகளுக்கும், அதற்குக் கீழே இருந்த அணிகளுக்கும் எதிராகப் போராடினோம். எனவே, நாங்கள் விளையாடிய விதத்திலும் முறையிலும் மிகவும் கடுமையான மாற்றம் ஏற்பட்டது.

நாங்கள் எங்கள் 50 ஓவர்கள் கிரிக்கெட்டை விளையாடுகின்ற விதத்தைப் பார்த்தோம். அது எங்களுக்கு மிகவும் சிறப்பாக செயல்பட்டது மற்றும் இங்கிலாந்து கிரிக்கெட் சபையில் உள்ள அதிகாரிகளும் இதுவரை தங்களால் முடிந்த வரை ஒத்துழைப்பு வழங்கியிருந்தனர்.

கிறிஸ் வோக்ஸ் மிகுந்த மகிழ்ச்சியுடன் உள்ளார். கடந்த இரண்டு வருடங்களில் எமது அணியின் சிறந்த பந்து வீச்சாளர்களில் ஒரு வராக இருந்து வருகிறார். அவரும் ஜொப்ரா ஆர்ச்சரும் சிறந்த முறையில் செயற்பட்டனர்.

ரோய் மற்றும் ஜோனி ஆகிய இருவரும் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக அபாரமாக விளையாடியிருந்தனர். அவர்கள் தங்கள் வாழ்க்கையின் வடிவத்தில் இருக்கிறார்கள். அவர்கள் அதைப் பயன்படுத்திக் கொள்கிறார் கள். அவர்கள் எங்களுக்கான வெற்றிப் பாதையை அமைத்துக் கொடுக்கிறார்கள் எனக் கூறினார்.

## தமிழர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொல்பொருள் வலயமாக காணப்படும் இந்த மலையில் பாரிய அளவில் கல் அகழ்வு இடம்பெறுகின்றமையே இதற்குக் காரணம் என மக்கள் கவலை தெரிவித்துள்ளனர் .

வரலாற்றுச் சிறப்பு மிக்க முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்துடன் தொடர்புடைய வாவெட்டி மலையில் அமைந்துள்ள வாவெட்டி ஈஸ்வரர் ஆலயத்தில் நேற்று மக்கள் வழிபாடுகளை மேற்கொண்டனர்.

ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலய வேட்டைத் திருவிழா அன்று ஆலயத்திலிருந்து வாவெட்டிமலை சிவன் ஆலயத்துக்குச் சென்று அங்கு விசேட பூசைகள் நடைபெற்று வேட்டையாடி ஆலயம் திரும்புவது வழமையாகும். போரால் இது தடைப்பட்டிருந்தது. இந்த நிலையில் கடந்த 2017ஆம் ஆண்டுமுதல் ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலய வேட்டைத் திருவிழா நடைபெறும் நாளில் மக்கள் வாவெட்டி மலைக்குச் சென்று அங்கு வழிபாடுகளை மேற்கொண்டுவருகின்றனர். அந்தவகையில் நேற்றும் ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலய வேட்டைத் திருவிழா நடைபெறும் நிலையில் இந்த மலையில் வழிபாடுகள் இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மிக உயர்ந்த மலையாக இது காணப்படுகின்றது. இந்த மலையில் சுமார் 1800ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்திலிருந்து வன்னியை ஆட்சி செய்த மன்னர்களால் ஆலயம் உருவாக்கப்பட்டு வழிபட்டு வந்தமைக்கான சான்றுகள் இன்றும் அங்கு காணப்படுகின்றன. மலையின் உச்சியில் ஆலயம் இருந்தமைக்கான கற்தூண்கள், மலையின் உச்சியில் கொடி நாட்டப்பட்டமைக்கான கொடிப்பீடம் ஆகியன இன்றும் காணப்படுகின்றன.

இந்தநிலையில் தொல்பொருள் திணைக்களத்தால் தொல்பொருள் அடையாளச் சின்னமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள இந்த மலையில் கடந்த 10 வருடங்களுக்கு மேலாகக் கருங்கல் அகழ்வு பணிகள் மிக தீவிரமாக இடம்பெற்றுவருகின்றது.

நாளாந்தம் பல நூற்றுக் கணக்கான டிப்பர் மூலம் கருங்கல் வெளியிடங்களுக்கு இங்கிருந்து கொண்டு செல்லப்படுகின்றது . தென்பகுதியைச் சேர்ந்த இரண்டு நிறுவனங்கள் அனுமதிகளைப் பெற்று இங்கே கல்லுடைக்கும் ஆலைகளை அமைத்து மிகப் பெருமெடுப்பில் கல் அகழ்வில் ஈடுபட்டு வருகின்றன.

இதனால் தமிழர்களின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த மலை அழிவடைந்து போகும் அபாயம் தோன்றியுள்ளதாக மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

தொல்பொருள் திணைக்களத்தின் ஆளுகையில் இருக்கும் இந்த மலையில் தொல்பொருள் இடங்கள் அழிவடையும் வகையில் எவ்வாறு அகழ்வுப் பணியை மேற்கொள்ள அனுமதி வழங்க முடியும் எனமக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

ஈழ தமிழர் வரலாற்றுடன் தொடர்புடைய இந்த மலையைத் தொல்பொருள் திணைக்களம் பாதுகாகவேண்டும் எனவும் மக்களை வேண்டுகோள் விடுத்துள்ளனர் . (ஐ)

## கடற்படைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீடிப்பு வழங்கியுள்ளார்.

இந்த நீடிப்பு இன்று முதல் நடைமுறைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

சில்வா இந்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி கடற்படைத் தளபதியாக நியமிக்கப்பட்டார். (ஐ)

## இலங்கைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேம்பாடு மற்றும் இந்து கலாசார அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

வவுனியா–சிவபுரத்தில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் பின்னர், செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டில் வடக்கு –கிழக்கு தமிழ் மக்களுடன் மலையகத் தமிழ் மக்களும் ஒன்று சேரவேண்டிய கட்டாயம் தற்போது ஏற்பட்டுள்ளது. அது தொடர்பான வேலைத் திட்டங்களையே நாடு முழுவதும் பரவலாகச் செய்து வருகிறேன்.

ஒன்றுபடும் நாம், முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களிடத்தில் சகோதரத்துவத்தைப் பேணும் வகையில் இருக்க வேண்டும்.

ஐக்கியப் படுகின்றோம் எனும் பெயரில் எங்கள் தனித்துவங்களை இழந்துவிடக்கூடாது என்பதில் உறுதியாக இருக்க வேண்டும் – என்றார். (ஐ)

## பிரபாகரனிடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாவலப்பிட்டியில் நேற்று நடந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

2015ஆம் ஆண்டு இருந்த அரசுக்கு எதிராக 2012, 2013 மற்றும் 2014 ஆகிய ஆண்டுகளில் ஐக்கிய நாடுகள் சபையில் மூன்று பிரேரணைகள் முன்வைக்கப்பட்டன. அந்தப் பிரேரணைகள் மூன்றையும் அரசு செயற்படுத்தவில்லை. அதற்கமைய 2015ஆம் ஆண்டு மீண்டும் அரசு ஆட்சி அமைத்திருந்தால் அந்த ஆண்டு மார்ச் மாதத்தில் பொருளாதாரத்தடை வந்திருக்கும்.

அதற்கு முகங்கொடுக்க முடியாமையால் இரண்டு வருடங்கள் எஞ்சியிருந்த நிலையில் அவசர அவசரமாக மஹிந்த தரப்பினர் தேர்தலுக்குச் சென்றனர். அவ்வாறு சென்றவர்கள், இன்று ஆட்சியைப் பிடிக்க முயல்கின்றனர். அது முடியாத காரியம். அதற்காக அவர்கள் பல போராட்டங்களையும் நடத்துகின்றனர்.

எதிர்க்கட்சியினருக்கு மீண்டும் ஆட்சி அதிகாரம் கிடைத்தால், அன்று நாடாளுமன்றத்தில் நடத்துகொண்டதைப் போன்று சண்டையிட்டு, சொத்துகளுக்குச் சேதம் விளைவித்து, பௌத்த புனித நூல் (தும்மபதம்), பைபிள் ஆகியவற்றை வீசி ஏறிந்து கலகம் செய்ததைப்போன்றே அவர்களின் ஆட்சியும் அமையும்.

இவ்வாறு நாடாளுமன்றத்தில் இவர்கள் நடந்து கொண்டதைப் போன்று பிரபாகரனைப் பிரதிநிதித்துவப்படுத்திய பிரதிநிதிகள் நாடாளுமன்றத்தில் நடந்து கொண்டதில்லை. அவர்கள் போன்று மஹிந்த அணியினர் நடந்துக்கொள்வதற்குக் கற்றுக் கொள்ள வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கை கண்டிய மன்னர்களின் கொள்கையாகும். அதாவது சிறுபான்மை இனத்தையும் சமநிலையில் நடத்த வேண்டும் என்பதே எமது கொள்கையாகும் – என்றார்.

## கிளிநொச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்துச் சம்பவம் பூநகரி – பரந்தன் வீதியில் இடம்பெற்றுள்ளது.

ரிப்பர் வாகனமும் சிறிய ரக வாகனமும் நேருக்கு நேர் ஒன்றுடன் ஒன்று மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் சிறிய வாகனத்தைச் செலுத்தி வந்த சாரதியே உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான விசாரணைகளைப் பூநகரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

## போர்க்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போர்க்குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட இலங்கையின் சிரேஸ்ட படை அதிகாரிகள் தொடர்பில் இவ்வாறு விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைப்பில் பணியாற்றிய அதிகாரியான யஸ்மீன் சூகா இது பற்றிய தகவல்களை அம்பலப்படுத்தியுள்ளார்.

விசாரணைகளை நடத்தி அது தொடர்பில் கடந்த 2015ஆம் ஆண்டு கூட்டு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளதாக சூகா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை இந்த விவகாரம் தொடர்பில் இலங்கை அரசுக்கு எவ்வித விவரங்களையும் அறிவிக்கவில்லை எனச் சுட்டிக்காட்டியுள்ளது.

இரகசியமாக நடத்தப்பட்ட விசாரணைகளின்போது சாட்சியாளர்கள் சத்தியக் கடதாசிகளை வழங்கியுள்ளதாக யஸ்மீன் சூகா கூறியுள்ளார் . எனினும், யஸ்மீன் சூகா எங்கு எப்போது இந்த விடயங்கள் பற்றி அம்பலப்படுத்தினார் என்பது பற்றியோ இலங்கையின் எந்தெந்த இராணுவ உயர் அதிகாரிகள் தொடர்பில் போர்க்குற்ற விசாரணை நடத்தப்பட்டது என்பது பற்றியோ செய்தியில் விவரங்கள் குறிப்பிடப்படவில்லை. (ஐ)

## மைத்திரியைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்படவுள்ளதுடன் பொதுத் தேர்தலின்போது ஐ.தே.கவின் பட்டியலில் இடம் ஒதுக்கப்படவுள்ளது எனவும் தெரியவருகின்றது.

இதன் காரணமாகவே நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பின்போது சுதந்திரக் கட்சியின் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்கவில்லை எனக் கூறப்படுகின்றது.

சு.கவின் நாடாளுமன்ற உறுப்பினர்களான பௌசி, விஜித் விஜயமுனி சொய்சா, பியசேன கமகே ஆகியோர் ஏற்கனவே ஐ.தே.கவுக்கு ஆதரவு வழங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.(ஐ)

## 2020 மே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ருடன் அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே இவ்விடயத்தைச் சுட்டிக்காட்டியுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

ஜனாதிபதித் தேர்தல் 2019 டிசம்பர் 9 ஆம் திகதிக்குள் நடத்தப்பட வேண்டும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ள நிலையில், சட்ட தரப்புகளில் மேற்படி கருத்தால் அரசியல் களத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் சட்ட வரைவொன்று சட்டமாக்கப்பட்டாலும் – உரிய ஆவணத்தில் சபாநாயகர் கையொப்பமிட்ட தினத்திலிருந்தே அது அதிகாரப்பூர்வமாக நடைமுறைக்கு வரும்.

அரசமைப்பின் 19 ஆவது திருத்தச்சட்டமானது 2015 ஏப்ரல் 28ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டாலும் மே 15 ஆம் திகதியே சபாநாயகர் கையொப்பமிட்டு அங்கீகாரம் வழங்கினார்.

எனவே, அன்றைய தினத்திலிருந்துதான் ஜனாதிபதியின் பதவிகாலத்தைக் கணிப்பிடவேண்டும் என்றும் இதன்படி ஜனாதிபதியால் 2020 மே மாதம் 15 ஆம் திகதிவரை பதவியில் இருக்க முடியும் எனவும் சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை, தனது பதவிகாலம் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உயர்நீதிமன்றத்திடம் விளக்கம் கோரவுள்ளார் என சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



## நாவற்குழியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வில் அமைக்கப்பட்ட சம்புத்தி சுமன விகாரை நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

போர் முடிவடைந்த பின்னர் கடந்த ஆட்சிக் காலத்தில் அரசின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட சிங்களக் குடியேற்றப் பிரதேசத்தில் இந்த விகாரை அமைக்கப்பட்டுள்ளது.

இதற்கு கடுமையான எதிர்ப்புக்கள் இருந்த நிலையிலும் அந்த விகாரை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

இந்த நிலையில் சம்புத்தி சுமன எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த விகாரையின் புண்ணியத் திருவிழாவாக இந்த நிகழ்வு நேற்று நடைபெற்றது. இந்த விகாரைக்கான புனித தாது குருநாகல் நெவகட செல்கிரி விகாரையிலிருந்து யாழ்ப்பாணம் வந்திருந்தது.

இதற்கமைய நவாற்குழிச் சந்தியிலிருந்து இந்த விகாரை அமைக்கப்பட்டுள்ள இடத்துக்கு பவணியாக புனித தாது கொண்டு செல்லப்பட்டது. சிங்கள பாரம்பரிய முறைப்படி அது விகாரைக்கு எடுத்து வரப்பட்டு புண்ணிய திருவிழா நடைபெற்றது.

இந்த நிகழ்வில் யாழ் மாவட்ட இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் தர்ன கெட்டியாராச்சி உள்ளிட்ட இராணுவ அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், உட்பட பெருமளவிலான இராணுவத்தினர் கலந்து கொண்டிருந்தனர். அதேபோன்று பெருமளவிலான சிங்கள மக்களும் பல இடங்களிலில் இருந்தும் வந்திருந்தனர். இதற்கு மேலாக அதிகளவிலான பௌத்த பிக்குகளும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

இதேவேளை இந்த நிகழ்வுக்கு இராணுவத்தினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டுப் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. அத்தோடு விகாரைக்குள் செல்வதற்கு சோதனைகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ–07)

## கிடைக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரிமைகளை வென்றெடுப்பதில் தவறில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

அரசுக்கு எதிராக ஜே.வி.பி. சமர்ப்பித்த நம்பிக்கையில்லாப் பிரேணைக்கு கூட்டமைப்பு எதிராக வாக்களித்தமை தொடர்பில் முன்வைக்கப்படும் விமர்சனங்கள் குறித்து வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

உயிர்த்த ஞாயிறு தாக்குதலை மையமாக கொண்டுதான் ஜே.வி.பி நம்பிக்கையில்லாப் பிரேரணையைச் சமர்ப்பித்தது என்றால் முதலில் ஜனாதிபதிக்கு எதிராகக் குற்றப்பிரேரணையையே கொண்டு வந்திருக்கவேண்டும்.

மக்கள் விடுதலை முன்னணியோ அல்லது வேறு எந்த கட்சியோ யாராக இருந்தாலும் அவர்கள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் பிரேரணைகள் அனைத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவளிக்கவேண்டிய அவசியம் கிடையாது.

இது போன்ற சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொண்டு தமிழ் மக்களுக்குக் கிடைக்கவேண்டிய உரிமைகளை பெற்றுக் கொடுக்கவே நாம் முயற்சிக்கின்றோம் – என்றார். (ஐ)

## கூட்டமைப்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களின் பெரும்பான்மை விருப்பு இனி ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிடைக்காது என நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்தன தேரர் தெரிவித்தார்.

மாவத்தகம பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் ஊடகங்களுக்குக் கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ரிசாத் பதியுதீன் ஆகியோரின் விருப்பத்திற்கு அமையவே அரசு செயற்படுகின்றது. சிங்கள பெரும்பான்மையினரின் கருத்துக்கள் பிற்போடப்பட்டுள்ளன. மக்கள் விடுதலை முன்னணியினர் கொண்டு வந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடித்து இவ்விரு தரப்பினரும் இடைப்பட்ட காலத்தில் தமது சுய தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவுள்ளனர். நாடாளுமன்ற நம்பிக்கையை வெற்றிக் கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஒருபோதும் இனி மக்களின் ஆதரவு கிடைக்கப் பெறாது – என்றார்.

## மைத்திரிபாலவிடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முழுமையாகத் தங்கத்தினால் செய்யப்பட்ட இந்தக்கைத்துப்பாக்கி, இயங்கக்கூடிய நிலையில் உள்ளதாக அவர் கூறினார்.

இந்த தங்கத் துப்பாக்கி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு பாகிஸ்தானின் முன்னாள் ஜனாதிபதியினால் பரிசாக வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக உலகின் பல நாடுகளைச் சேர்ந்த அரச தலைவர்கள் பெறுமதியான பல பரிசுகளை வழங்கியுள்ளனர். இந்த பரிசுப்பொருட்களை பொலனறுவையில் புதிதாக திறக்கப்பட்ட அருங்காட்சியகத்துக்கு வழங்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் என செயலக உயர் அதிகாரி (ஜ01.07.2019ும் கூறினார். (ஐ)

# காணாமற்போனோர் விடயத்தில் சர்வதேசத் தலையீடு வேண்டும்!

## உறவுகள் மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டம்







மட்டக்களப்பு, ஜூலை 14

வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுத் தர சர்வதேச சமூகத்தின் தலையீட்டைக் கோரி காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மட்டக்களப்பில் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

மட்டக்களப்பு காந்தி பூங்காவில் நேற்று ஒன்றுகூடிய வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் அனைத்து மாவட்டங்களின் சங்க பிரதிநிதிகளும் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

இதன்போது காணாமலாக்கப்பட்ட தமது உறவுகள் குறித்து இதுவரை அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லையென்றும் தொடர்ந்தும் தம்மை அரசு ஏமாற்றி வருவதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோசம் எழுப்பினர்.

'எமது உறவுகளை கடத்தியமை இன அழிப்பே', 'சிங்கள பௌத்த நலன்களுக்குள் எமக்கான நீதி புதைக்கப்பட்டுவிட்டதா?', 'எமது உறவுகளே எமக்கு வேண்டும்', 'பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் உரிமைக் குரல் அடக்கப்படுவது ஐ.நா.வே உனக்குத் தெரியாதா?', 'சிங்கள இராணுவமே எங்கள் எது உறவுகள் எங்கே?' போன்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளையும் போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் ஏந்தியிருந்தனர்.

இன்று தமது பிரச்சினைகள் குறித்து பேசுவதற்கு யாரும் முன்வருவதில்லையெனவும் தம்மை அனைவரும் கைவிட்டுள்ளனர் எனத் தாங்கள் உணர்கின்றனர் எனவும் போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் தெரிவித்தனர். (ஐ)

## நாடு திரும்பினார் மைத்திரி!

கொழும்பு, ஜூலை 14

பிரிட்டனுக்கு விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடு திரும்பியுள்ளார்.

அவர் நேற்று முற்பகல் 10 மணியளவில் கட்டார் நாட்டுக்குரிய விமானம் மூலம் கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால தனிப்பட்ட விஜயமாக பிரிட்டன் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அழிவுற்றுள்ள கூட்டுறவை பலப்படுத்த நடவடிக்கை

### யாழ். மாவட்டக் கூட்டுறவு ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 14

அழிவடைந்துள்ள கூட்டுறவுத்துறையைப் பலப்படுத்துவதற்கு பல முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என யாழ்.மாவட்ட கூட்டுறவு ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார்.

எதிர்காலத்தில், இன்னும் சிறப்புறக் கூட்டுறவுத் துறை தனது சேவையைச் செய்யுமென அவர் குறிப்பிட்டார்.

97ஆவது கூட்டுறவு துறை நிகழ்வையொட்டி யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில் –



கூட்டுறவானது சமூக பொருளாதாரத்தை மேம்படுத்தும் ஒரு அமைப்பு. கூட்டுறவுத்துறை 525 ஆயிரம் அங்கத்தவர்களைக் கொண்டது. தன்னிறைவுப் பொருளாதாரத்தில் போட்டி காரணமாகக் கூட்டுறவு பாதிக்கப்பட்டுள்ளமை உண்மை.

கூட்டுறவுக் கிளைகளைப் பலப்படுத்துவதன் ஊடாக வியாபாரத்தை ஊக்குவிப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

போட்டி வியாபாரமும், போசணை வியாபாரத்துக்கு முன்னுரிமை அளித்து வருகின்றமையால், கூட்டுறவுத் துறை பாதிக்கப்பட்டுள்ளது. அந்தவகையில், கூட்டுறவுத் துறை புத்தாக்கம் பெற வேண்டுமென்பதற்காக பல உத்திகளைக் கையாண்டு வருகின்றோம்.

கூட்டுறவுத் துறை காலப்போக்கில் வெற்றி பெறும் என்பது எமது நம்பிக்கை. கூட்டுறவுத் துறையின் நிதி சார்ந்து, கூட்டுறவுச் சங்கங்கள், கிராமிய வங்கிகள் திறம்பட இயங்கி வருகின்றன.

கூட்டுறவு மற்றும் மத்திய வங்கியின் ஆசீர்வாதத்துடன், பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன. கடந்த வருடம் 50 கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டது. இந்த வருடம் 25 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது – என்றார். (ஐ – 07)

## வீட்டுத் திட்டம் கிடைக்கவில்லை

### பாரதிபுரம் மக்கள் விசனம்

கிளிநொச்சி, ஜூலை 14

கிளிநொச்சி பாரதிபுரம் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீட்டுத்திட்டம் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டபோதிலும் இதுவரை அது வழங்கப்படவில்லை என மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பாரதிபுரம் கிராம சேவையாளர் பிரிவில் இடம்பெற்ற வெள்ள அனர்த்தத்தின்போது 157 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருந்தன.

இவர்களில் பெரும்பாலானோர் தற்காலிக கொட்டகைகளில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்கு 7 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான வீட்டுத்திட்டம் வீடமைப்பு அதிகார சபையின் ஊடாக வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த வீட்டுத்திட்டப் பயனாளிகளாக 79 பேர் தெரிவாகினர் என தெரிவுப் பட்டியல் ஒட்டப்பட்டபோதிலும் இது வரை வீட்டுத்திட்டம் வழங்கப்படவில்லை என மக்கள் கூறுகின்றனர்.

தாம் தொடர்ந்தும் வெள்ளம், வறட்சி உள்ளிட்ட இயற்கை அனர்த்தங்கள் மற்றும் அதிக வெப்ப காலங்களில் வாழ்ந்து வருகின்றனர் எனவும் தமக்கென நிரந்தர வீடொன்றை அமைத்து தர அரசு பின்னிற்கின்றது எனவும் அவர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

தாம் வீட்டுத்திட்டப் பயனாளிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளமையானது வெறும் எழுத்தில் மாத்திரமே உள்ளதாகவும், அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை என்றும் குற்றம் சாட்டும் மக்கள், இந்த அரசு தம்மீது அக்கறையின்றி செயற்படுவதாகவும் கூறியுள்ளனர்.

பயனாளிகள் தெரிவு இடம்பெற்று 8 மாதங்கள் கடந்த நிலையில், தற்போதுவரை வீடு வழங்கப்படாமைக்கான காரணம் என்னவென மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

## போதைப்பொருளுடன் கைதாகிய 9 ஈரானியர்களுக்கு விளக்கமறியல்

கொழும்பு, ஜூலை 14

போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்ட ஈரானியர்கள் 09 பேரையும் எதிர்வரும் 19ஆம் திகதி வரை தடுத்து வைத்து விசாரணை செய்வதற்கு போதைப்பொருள் தடுப்புப் பிரிவுக்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

இந்த வழக்கு விசாரணைகள் நேற்றுச் சனிக்கிழமை கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்றபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

காலித் துறைமுகத்தை அண்மித்த கடற்பரப்பில் கொடி மற்றும் பதிவுக் குறிப்பு இல்லாத நிலையில் இந்தப் படகு பிடிக்கப்பட்டது. இந்தப் படகிலிருந்து 70 கிலோகிராம் ஹெரோயின், 812 கிராம் அபின் முதலான போதைப்பொருள்களுடன் 9 ஈரானியர்கள் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அனைத்து இன, மதங்களின் உரிமைகளை பாதுகாப்பவரே ஐ.தே.க.வின் வேட்பாளர்!

### கூறுகின்றார் அமைச்சர் சம்பிக்க ரணவக்க

கொழும்பு, ஜூலை 14

அனைத்து இன, மதத்தவர்களின் உரிமைகளையும் பாதுகாத்து, நாட்டை முன்நோக்கிக் கொண்டுச் செல்லக்கூடிய ஒருவரையே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக களமிறக்கவுள்ளோமென மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டாலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் –

தற்போதைய சூழ்நிலையில் நாட்டை முன்நோக்கிக் கொண்டுச் செல்வதற்குரிய புத்திசாலித்தனம் கூடிய படித்த ஒருவருக்கு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு வாய்ப்பை வழங்குவதற்கு தயாராக உள்ளோம்.

ஜனாதிபதி வேட்பாளர் குறித்து எந்ததொரு கலந்துரையாடலும் ஐக்கிய தேசியக் கட்சியில் இன்னும் இடம்பெறவில்லை.

அந்தவகையில் உரிய நேரத்தில் ஜனாதிபதி வேட்பாளர் குறித்து அறிவிப்போம் – என்றார். (ஐ)

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.07.2019 இல் வெளியிடப்பெற்றது.